வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




01.02.2021 திங்கட்கிழமை


04
உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் குறி வைக்கப்படுகிறதா?


06
நாடு தழுவிய அளவில் இன்று போராட்டம்


10
பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் இல்லை


12
முகக் கவசங்களால் அந்தரிக்கும் பறவைகள்

# ‘ஸ்புட்னிக் வி’ தடுப்பூசி தயாரிக்கிறது இலங்கை

## அனுமதியளிக்க விரும்புகிறது ரஷ்யா



கொழும்பு, பெப்ரவரி 01

கொரோனா தொற்றுக் கட்டுப்பாட்டுக்கு தனது கண்டுபிடிப்பான ‘ஸ்புட்னிக் வி’ தடுப்பு மருந்தை இலங்கை உற்பத்தி செய்வதற்கான தனது விருப்பத்தை ரஷ்யா வெளிப்படுத்தியுள்ளது. 02



## விவசாயிகளுக்கு எதிரான வழக்குகளை மீளப்பெறுக

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

மொனராகலை, பெப்.01

பாரம்பரியமாக விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் நிலங்களை விவசாயிகள் தொடர்ந்தும் பயிரிட அனுமதிக்கும் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பழைய சுற்றறிக்கைகளின் கீழ் தாக்கல் செய்யப் 02

## யாழில் பி.சி.ஆர். சோதனை: 15 பேருக்கு தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று நடத்திய சோதனையில் 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதில் மூவர் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்று வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள் 02

## ஹெரோயின் வைத்திருந்த பெண் அராலியில் கைது!



யாழ்ப்பாணம், பெப். 01

ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரை காங்கேசன்துறை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அராலி கோட்டைக்காடு பகுதியில் வைத்து நேற்றிரவு 10.30 மணியளவில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைதான பெண் வீட்டில் ஹெரோயின் போதைப் பொருளை பதுக்கி வைத்துள்ளார் என்று இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப் 02

## இலங்கையில் வெளிநாடுகளின் தலையீட்டை சீனா விரும்பாது

### இலங்கைக்கான சீனத் தூதரகம்

கொழும்பு, பெப். 01

“மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள், இன முரண்பாடுகளுக்கான தீர்வுகள் போன்ற விடயங்கள் இலங்கையின் உள்ளக விடயங்களாகும். இதில் மக்கள் சீனக் குடியரசு ஒருபோதும் தலையீடு செய்யாது. ஏனைய நாடுகள் தலையீடு செய்வதையும் விரும்பாது” - இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும் ஊடகப் பேச்சாளருமான 02



## நேற்று மட்டும் வடக்கில் 1530 பேருக்குத் தடுப்பூசி!

### வடக்கு சுகாதார பணிப்பாளர்

யாழ்ப்பாணம், பெப். 01

வடக்கு மாகாணத்தில் நேற்று 1530 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்தத் தொகையினர் தடுப்பூசிக்கு தெரிவானோரில் 15 சதவீதத்தினராவர் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். 02

## கொரோனா பலி மூன்றால் உயர்வு

கொழும்பு, பெப். 01

கொரோனா தொற்றால் நேற்றும் மூவர் உயிரிழந்தனர். இதனால், நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 316ஆக அதிகரித் 02

## இந்தியாவிடம் 25 இலட்சம் தடுப்பூசிகளை பெறுவதற்கு முடிவு

கொழும்பு, பெப். 01

இந்தியாவிடம் இருந்து 25 இலட்சம் டோஸ் கொரோனா தடுப்பு மருந்தை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்று கொரோனா தடுப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் மருத்துவர் அமல் ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த மருந்துகளை ஒரு மாத காலத் 02

## பொத்துவில் - பொலிகண்டிவரை

# போராட்டத்திற்கு கிழக்கில் முழுஆதரவு



மட்டக்களப்பு, பெப். 01

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் தமிழின அழிப்பு மற்றும் அடாத்தான பௌத்த மயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெறவுள்ள பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்திற்கு கிழக்கு மாகாண அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் முழு ஆதரவு தெரிவித் 02

## கொரோனாவால் மரணிப்போரின் உடல் அடக்கத்துக்கு அனுமதிக்குக!

### அமெரிக்க செனட்டர் வலியுறுத்து



வாஷிங்டன், பெப். 01

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் மட்டுமே செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பது மனித உரிமை மீறலே என்று ஐ.நா மனித உரிமை வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். எனவே, உடல்களை 02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## போராட்டத்திற்கு...

துள்ளன.

நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இந்த ஆதரவுக் கூட்டம் மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், கட்சிகளின் பிரதிநிதிகள், சர்வமத அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை பண்ணையாளர்கள் சங்க பிரதிநிதிகள், இளைஞர், மகளிர் அணிகளின் பிரதிநிதிகள் என பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில், இன, மத பேதங்களையும் கட்சி வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

நாளை மறுதினம் புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் ஆரம்பிக்கும் வாகனப் பேரணி 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் பொலிகண்டியை வந்தடையும்.

தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்தமயமாக்கல் திட்டங்களை அரசாங்கம் முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவற்றை நிறுத்தி தாயகத்தைப் பாதுகாக்க அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஒன்றிணைய வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

“2009ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழர் பகுதிகள் சிங்கள மயமாக்கல் நிகழ்ச்சி திட்டத்தின் மூலமாக காணிகள் அபகரிக்கும் நிலை உள்ளது”, என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் இதன்போது தெரிவித்தார்.

இந்த மக்கள் எழுச்சி போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கு எங்கும் உள்ள தமிழ் பேசும் உறவுகளும் ஆதரவை வழங்கி மிகப்பிரமாண்டமான பேரணியாக இதனை நடத்தவேண்டும். இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல ஆதரவு வழங்க வேண்டும் என்றும் இதன்போது அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட சாணக்கியன் எம்.பி., “இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக ஜனநாயக விரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளுக்கு தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற அநீதிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இந்த போராட்டத்திற்கு கிழக்கு மாகாண மக்கள் முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருக்கின்றனர். எந்தத் தடை வரினும் உடைத்துப் போராட மக்கள் தயாரக உள்ளனர்”, என்றார்.

“வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம். இது அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்”, என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் கூறினார். (ஐ)

## நேற்று மட்டும்...

நேற்று ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் உள்ள மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்த தடுப்பூசி மருந்து வழங்கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 944 சுகாதாரத் துறை சேவையாளர்கள் தெரிவாகினர்.

மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் இந்தப் பணியில் முதல் நாளான நேற்றுமுன்தினம் 2 ஆயிரத்து 997 பேர் தடுப்பூசியைப் பெற்றனர். இரண்டாம் நாளான நேற்று ஆயிரத்து 530 சுகாதார சேவையாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டனது.

இதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 875 பேரும், கிளிநொச்சியில் 100 பேரும், மன்னாரில் 200 பேரும், வவுனியாவில் 210 பேரும் முல்லைத்தீவில் 145 பேரும் அடங்குவர்.

மூன்றாம் நாளான இன்று திங்கட்கிழமையும் தடுப்பூசி ஏற்றும் பணி இடம்பெறும் என்று மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஐ-3)

## ஹெரோயின்...

படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது. அவரிடம் இருந்து 15 பைக்கெற்றுக்களில் பொதி செய்யப்பட்ட ஹெரோயினை புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

## இந்தியாவிடம்...

துக்குள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 35 இலட்சம் அஷ்ட்ராசெனகா கோவிஷீல்ட் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவும் முயற்சி எடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த தடுப்பூசிகள் நாட்டை வந்தடையும்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கும் பணியை அரசாங்கம் ஆரம்பிக்கும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## ஸ்புட்னிக்...

ஸ்புட்னிக் வி தடுப்பு மருந்தை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரிக்கும் பட்சத்தில் இந்தத் தடுப்பூசியை உற்பத்தி செய்ய முடியும் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸ்பூட்னிக் வி தடுப்பூசி ஏற்கனவே இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. 30 கோடி தடுப்பூசியை இந்திய ஆய்வகங்களில் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் - ரஷ்யாவும் கடந்த ஆண்டு கையெழுத்திட்டன.

சீன மற்றும் ரஷ்யாவின் தடுப்பூசிகளின் செயல்திறன் நிரூபிக்கப்பட்டால் இலங்கையில் அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ அங்கீகாரம் அளித்துள்ளார். ஆனால், சீன மற்றும் ரஷ்யாவின் தடுப்பூசிகளின் அவசரகால பயன்பாட்டுக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் இதுவரை அனுமதி வழங்கவில்லை.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியது. இதையடுத்து 5 இலட்சம் தடுப்பூசிகள் கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு இந்தியாவால் இலவசமாக வழங்கப்பட்டன.

இதேவேளை, 3 இலட்சம் சினோபாம் (Sinopharm) தடுப்பூசிகளை இலங்கைக்கு இலவசமாக வழங்க சீனா தயாராக உள்ளது என்று அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் பாலித கோஹன தெரிவித்துள்ளார். சினோபாம் தடுப்பூசிக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கினால், அவை நாட்டுக்கு வரும் என்று அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும், இலங்கைக்கு தடுப்பூசிகளை இலவசமாக வழங்குதாக ரஷ்யா அறிவிக்கவில்லை. இந்நிலையில், ஸ்புட்னிக் வி தடுப்பூசியை நாட்டிலேயே உற்பத்தி செய்ய அனுமதிப்பபதன் மூலம் குறைந்த செலவில் தடுப்பூசியைப் பெற முடியும் - என்று கூறப்படுகின்றது. (ஐ)

## கொரோனா பலி...

துள்ளது.

கொழும்பு - 8ஐ சேர்ந்த 38 வயதான ஒருவர் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் தொற்றால் நேற்று உயிரிழந்தார். இவரின் உயிரிழப்புக்கு நிமோனியா காய்ச்சலுடன் கொரோனா தொற்றும் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோல, கொழும்பின் கடுவலை பிரதேசத்தை சேர்ந்த 68 வயதான பெண் ஒருவர் தொற்றால் உயிரிழந்தார். இவரின் மரணத்துக்கு கொரோனா தொற்று, நிமோனியா, இதயம் செயலிழந்தமை போன்றன காரணங்களாக கூறப்பட்டன.

இரத்தினபுரி - அங்குருவத்தொட்டை பகுதியை சேர்ந்த 69 வயதான பெண் ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

## விவசாயிகளுக்கு...

பட்ட வழக்குகளை மீளப் பெறுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

‘கிராமத்துடன் உரையாடல்’ நிகழ்ச்சியின் போது பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து வரும் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, மக்களின் நலனுக்காக புதிய சட்டங்களை வகுக்க நடவடிக்கை எடுக்குமாறு வனவிலங்கு, வன பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் காணி உள்ளிட்ட அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதுள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு புதிய சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக அரச நிறுவனங்களுடன் வழக்குகளில் சம்பந்தப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சிக்கல்கள் தீர்க்கப்பட்டு இறுதி செய்யப்பட்ட 17 ஆயிரம் காணி உறுதிகளில் தான் கையெழுத்திடுள்ளார் என்றும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில, அலுத்வெள கிராம உத்தியோகத்தர் பிரிவில் குக்குல் கட்டுவ குளக்கரை வளாகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டார். (ஐ-எ)

## கொரோனாவால்...

அடக்கம் செய்யவும் அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் கிறிஸ் வான் ஹொலன் கடிதம் மூலம் இலங்கையை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் அமெரிக்காவுக்கான தூதர் ரவிநாத் ஆரியசிங்கவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கிறிஸ் வான் ஹொலன், அமெரிக்க செனட்டால் நியமிக்கப்பட்ட இலங்கைக்கான குழுவின் முன்னாள் இணைத் தலைவரும் ஆவார்.

கிறிஸ் வான் ஹொலனின் கடிதத்தில்-

கொவிட் -19 நோய்த்தொற்றால் இறக்கும் நபர்களின் உடல்களை அடக்கம் செய்வது நிலத்தடி நீர் மாசுபடுதலை அதிகரிக்கும் என்று இலங்கை சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர். ஆனால், உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்கள் அடக்கம் மற்றும் தகனம் ஆகிய இரண்டிற்கும் அனுமதி அளித்துள்ளன. உடல்களை அடக்கம் செய்வதால் வைரஸ் பரவுகிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லையென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தொற்றால் இறந்தவர்களை தகனம் மட்டுமே செய்ய வேண்டுமென வற்புறுத்துவது மனித உரிமை மீறல், மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐ.நா மனித உரிமை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனால், தொற்றுநோயால் இறப்பவர்களின் மனித சடலங்களை கட்டாயமாக தகனம் செய்யும் முடிவை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை ஐ.நா சபை வலியுறுத்தியுள்ளது. அதை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## யாழில் பி.சி.ஆர்...

ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று 245 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவருக்கும், மன்னாரை சேர்ந்த இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வெள்ளாங்குளம் தனிமைப்படுத்தல் தனிமைப்படுத்தல் மையத்தை சேர்ந்த 10 பேர், ஜம்புகோளப் பட்டின முகாமை சேர்ந்த ஒருவர் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தை சேர்ந்த ஒருவர் எனப் 12 பேருக்கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ-3)

## இலங்கையில்...

லு சொங் தெரிவித்தார்.

அத்துடன் மனித உரிமைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது எனவும், இதடினப்படையில் சில நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை குறித்த மீளாய்வு அறிக்கையில், இலங்கை அபாயகரமான பாதையில் பயணிக்கின்றது.

இதேநேரம், ஏற்கனவே நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலைச் செய்வதற்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதுள்ளிட்ட பல விடயங்களை குறிப்பட்ட காட்டமான உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன.

இதுபற்றிய மக்கள் சீனக் குடியரசின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என்றும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகளால் புதிய பிரேரணை கொண்டுவரப்படவுள்ள நிலையில் அதன் மீதான வாக்கெடுப்பில் மக்கள் சீனக் குடியரசு எவ்விதமான பிரதிபலிப்பைப் போகின்றது என்றும் வினவியபோதே இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவருமான ஊடகப் பேச்சாளருமான மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## ஜெனிவா விவகாரம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை வடக்கு - கிழக்கில் காணாமல் போயுள்ளனர். அவர்கள் பற்றி கண்டறிய பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இன்றுவரை அவர்கள் பற்றி எதுவுமே கண்டறியப்படாதிருக்கின்றது. காணாமல்போன ஆயிரக்கணக்கானவர்கள் பற்றிய சமாச்சாரத்தையும் வெளிவிவகார அமைச்சர் பூமியில் இடம்பெறாத விடயம் என்றே குறிப்பிடுவாரா?

வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் தினேஷ் குணவர்த்தன அறிந்திருக்கவேண்டிய விடயமென்னவென்றால், இலங்கையர்களைவிட சர்வதேச சமூகத்தின் பல நிறுவனங்கள் இலங்கையில் இடம்பெறும் ஒவ்வொரு சம்பவம் பற்றியும் நன்கறிந்து வைத்துள்ளன என்பதே. இந்நிலையில், இத்தடவை ஜெனிவாவில் 46ஆவது மனித உரிமைப் பேரவை மகாநாட்டில் இலங்கை இலகுவில் நொண்டிக் காரணங்களைக்கூறி தப்பமுடியாத நிலையே காணப்படும்.

எனவே, சர்வதேச சமூகமும், இலங்கையின் தமிழ் அரசியல் தரப்பும், இலங்கையின் நீண்டகால நன்மை கருதி இலங்கை அரசும் இத்தடவை ஜெனிவா மனித உரிமைப்பேரவை கூட்டத்தொடரில் ஆண்டுதோறும் இலங்கைப் பிச்னையை ஒரு தொடர்கதையாக கொண்டு செல்லாது இருப்பதை உறுதி செய்ய வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

ஈழநாடு
Eelanadu
01.02.2021 திங்கட்கிழமை
சார்வரி, தை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இராஜதந்திர நெருக்கடிகள்

இலங்கையின் மீதான இராஜதந்திர நெருக்கடிகள் அதிகரித்திருக்கின்றன. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இவ்வாறானதொரு நிலைமை ஏற்கனவே பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்கள் உயர்நிலையிலிருந்தது. மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைப்பதற்கு, மஹிந்த ராஜபக்ஷ முற்றிலுமாக மறுத்ததன் விளைவாகவே, அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டது. ஆனால், ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, அதிகாரத்தை பொறுப்பேற்றுக்கொண்ட ரணில்-மைத்திரி அரசாங்கம், மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைத்து, நிலைமைகளை கட்டுக்குள் கொண்டுவந்தது. மேற்குலகத்துடன் நெருங்கிச் செயற்படும் முடிவால் மஹிந்தவின் நிர்வாகத்தினால் ஏற்பட்ட சரிவுகளை ரணில்-மைத்திரி அரசாங்கம் ஓரளவு சரிசெய்துகொண்டது. இதில் மங்கள சமரவீரவின் நகர்வுகளுக்கு முக்கிய பங்குண்டு. ஆனால், இந்த நிலைமைகள் தொடர்பில் தாயகத்திலுள்ள ஒருசில அரசியல் குழுக்களும் (கட்சிகளும் அடக்கம்) மற்றும் புலம்பெயர் சமூகத்திலுள்ள அரசியல் குழுக்களும், ஆட்சி மாற்றம் தமிழர் தேசத்திற்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்கின்றது - இதற்கு கூட்டமைப்பும் துணைபோகின்றது என்றவாறான விமர்சனங்களை முன் வைத்துவந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் மீளவும் ராஜபக்ஷக்கள் ஆட்சியை கைப்பற்றியதைத் தொடர்ந்து, நாடு மீளவும் இராஜதந்திர நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டிருக்கின்றது. ராஜபக்ஷக்களின் பலமான நிர்வாகம், மீளவும் மனித உரிமைகள் பேரவையுடன் அதாவது, மேற்குலகத்துடன் இணங்கிப்போகும் முடிவை நிராகரித்திருக்கின்றது. அதேவேளை, ஏற்கனவே ராஜபக்ஷக்கள் தொடர்பில் மேற்குலக இராஜதந்திர வட்டாரத்தில் ஓர் எதிர்மறையான பார்வையே நிலவுகின்றது. இவையனைத்தும் சேர்ந்துதான், ஆணையாளரின் கடுமையான அறிக்கையாக வெளிவந்திருக்கின்றது. ஆணையாளரின் அறிக்கை இலங்கையின் மீதான இராஜதந்திர நெருக்கடிக்கான கதவை மீளவும் திறந்துவிட்டிருக்கின்றது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் இலங்கையை கட்டுப்படுத்தாதுவிட்டாலும்கூட, ஐ. நா. வின் ஓர் அங்கமான மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் இலங்கை தொடர்பில் தெரிவிக் கப்பட்டிருக்கும் விடயங்கள் ஏதோவொரு வகையில் அரசாங்கத்திற்கான நெருக்கடியாகவும் தொந்தரவாகவும் சர்வதேச அரங்குகளில் தொடரும் ஒரு நிரந்தர தலைவலியை ஏற்படுத்தும். தலைவலியுடன் எந்தவொரு வேலையையும் அரசாங்கத்தினால் முன்கொண்டுசெல்ல முடியாது போகும்.

இந்த விடயங்களை தொகுத்து நோக்கினால், இந்த நெருக்கடிகள் தமிழர் தரப்பின் இராஜதந்திர ஆளுமையால் வந்த ஒன்றல்ல. மாறாக, சிங்கள கடும்போக்கு இராஜதந்திரத்தின் விளைவால் வந்த ஒன்று. மூன்று கட்சிகள் இணைந்து ஓர் அறிக்கையை அனுப்பிய பின்னர் ஆணையாளரின் அறிக்கை வெளிவந்ததாலும், தாங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் சில விடயங்கள் ஆணையாளரின் அறிக்கையில் இருப்பதாலும், சிலர் கற்பனைக் குதிரையை கண்டபடி ஓடவிடலாம். ஆனால், உண்மை வேறு. அதாவது, இன்றைய அரசாங்கத்தின் கடும்போக்கே இவ்வாறானதொரு காட்டமான அறிக்கைக்கான காரணம். ஒரு பேச்சிற்கு, தமிழர் தரப்பின் ‘லொபி’யால்தான் இவ்வாறானதொரு விடயம் நடந்ததென்று வாதிட முடியுமானால், மூன்று கட்சிகளின் அறிக்கை ஆணையாளருக்கு அனுப்பப்படுவதற்கு முன்னரே, பிரித்தானிய தமிழர் பேரவையினால் தயாரிக்கப்பட்டு, எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் பிறிதோர் அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், பயணத்தடை போன்றவை வலியுறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயின், அந்த அறிக்கையும் ஆணையாளரின் அறிக்கையில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாமல்லவா! ஏனெனில், மூன்று கட்சிகளின் அறிக்கை அனுப்பப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாகவே குறித்த அறிக்கை ஆணையாளருக்கும், இணைத் தலைமை நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால், இவ்வாறான உரிமை கோரல்களில் நேரத்தை செலவிடுவதில் பயனில்லை. நிலைமைகளை சரியாக விளங்கிக்கொண்டு, ஒவ்வொருவரும் தங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதே முக்கியமானது. காலத்தை தவறவிடும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர் தரப்பு மேலும் பின்னடைவையே சந்திக்கும்.

# ஜெனிவா விவகாரம் ‘தொடர்கதையாக’ இருக்கலாகாது!

- அலசுவது **இராஜதந்திரி** -

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் இன்னும் சில வாரங்களில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. ‘யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே’ என்ற பழமொழிக்கு ஏற்ப, ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்பதாக இலங்கை குறித்து பலதரப்பட்ட ஐ. நா. ஸ்தாபன நிறுவனங்கள் மற்றும் ஐ. நா. மனித உரிமைப்பேரவையில் அங்கம் பெறுகின்ற முக்கிய பிரதிநிதிகள் இலங்கை குறித்து தமது கருத்து கண்ணோட்டங்களையும், அபிப்பிராயங்களையும் வெளியிட்ட வண்ணமிருக்கின்றனர்.

இலங்கையில் மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுற்ற நிலையில், மனித உரிமைகளை மேம்படுத்தவும், யுத்தக்குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவற்றை விசாரித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்க வழி செய்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கி புதிய அரசியலமைப்புடன் இன நல்லுறவை மேம்படுத்தும் விதத்திலுமே ஜெனிவா பிரேரணை கொண்டவரப்பட்டிருந்தது. ஆனால், இப் பிரேரணையை முற்றுமுழுதாக நிறைவேறவிடாது தடுப்பதில் முன்னனைய அரசு மிக நல்ல முறையில் தனது நகர்வுகளை மேற்கொண்டதோடு தமிழ் தேசிய கூட்டமைப்பும் இது விடயத்தில் அசமந்தப் போக்குடனிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**சர்வதேச சமூகத்தின் கரிசனை**

தற்போது மீளவும் ஜெனிவா மனித உரிமைப்பேரவை குறித்தும், இலங்கை தொடர்பான பிரேரணை குறித்தும் சர்வதேச சமூகத்தின் பல தரப்பட்ட தரப்பினரும் பிரஸ்தாபிக்க ஆரம்பித்துள்ளதை காணமுடிகின்றது. இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையை விமர்சித்துள்ள வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பூமியிலேயே இடம்பெறாத விடயங்கள் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**வெளிவிவகார அமைச்சர் தினேஷின் உளறல்**

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ள இக்கருத்தை பார்க்கும்போது, தம்மை அறியாமலேயே அவர் இலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து உளறித்தள்ளியுள்ளார் என்பதையே அறிய முடிகின்றது.



உண்மையில் பூமியிலேயே இடம்பெறாதவையும், எண்ணிப்பார்க்க முடியாதவையும் இலங்கையில் நடந்துள்ள காரணத்தினாலேயே ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் தமது அறிக்கையில் அவற்றை சுட்டிக்காட்டியுள்ளார் என்பதை, ‘நுணலும் தன்வாயால் கெடும்’ என்பதைப் போல வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது கருத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் யுத்தம் பங்களாதேஷ் உருவாக்கத்துக்காக 1971ஆம் ஆண்டு இடம்பெற்ற போது, கிழக்குப் பாகிஸ்தான் என்ற இன்றைய பங்களாதேஷில் ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் வீரர்கள் இந்திய படையினரிடம் சரணடைந்தனர். அச்சமயம் இந்திய இராணுவ தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சாம் மனெக்ஷ, சரணடைந்த அனைத்து பாகிஸ்தான் வீரர்களது பாதுகாப்பையும் தாமே முன்னின்று உறுதிப்படுத்தியதோடு, அவர்களை பக்குவமாக பாகிஸ்தான் அரசிடம் கையளித்தார்.

**பீல்ட் மார்ஷல் சாம் மனெக்ஷ?**

பீல்ட் மார்ஷல் சாம் மனெக்ஷவின் இந்த நடவடிக்கை உயர்ந்த தரத்திலான இராணுவ மாண்பினைக் காண்பித்திருந்தது. இதேவேளை, இலங்கையில் 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினரின் கோரிக்கைக்கிணங்க சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்கள் என்று கருதப்பட்ட ஏராளமான மக்கள் இன்று வரை காணாமல் ஆக்கப்பட்டோராகவே இருக்கின்றனர்.

எனவே, இந்த நடவடிக்கையை பூமியிலேயே நடைபெறாத ஒரு நடவடிக்கை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் மறுக்க முடியுமா?

இதுதவிர, ஆயிரக்கணக்கானோர் இன்று

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# இறந்தோர் உடல்களை பாதுகாக்க வடமராட்சியில் குளிரூட்டி வசதி!

## ஊறணி இந்து மயானத்தில் அமைகிறது

வடமராட்சி, பெப். 01

வடமராட்சி பிரதேசத்தில் இறந்தவர்களின் உடல்களை பாதுகாப்பதற்கு குளிரூட்டி வசதிகள் ஊறணி இந்து மயானத்தில் ஏற்படுத்தப்படவுள்ளன என்று வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் கோ. கருணானந்தராசா தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையிலிருந்து பலர் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். அவர்களின் நெருங்கிய உறவினர்கள் இங்கு இறக்கும் சூழ்நிலையில், அவர்கள் உடனடியாக இலங்கைக்கு வந்து இறுதி சடங்கில் கலந்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புலம்பெயர் மக்களின் உதவியுடன் ஊறணி இந்த மயான வளாகத்தில் குளிரூட்டி வசதிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப தொகை சேர்ந்ததன் பின்னர் விரைவில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போதைய கொரோனாவால் லண்டன் மற்றும் சில நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை மட்டுப்படுத்தப்பட்டு அல்லது தவிர்க்கப்பட்டு இருக்கும் நிலையில், இந்த குளிரூட்டும் வசதி வந்தால், வெளிநாட்டில் உள்ள உறவுகள் வரும்வரை இங்குள்ள அவர்களுக்குரியவர்களின் இறந்த உடலங்களை பேணி வைத்திருந்து அவர்கள் வந்தபின், இறுதிச் சடங்குகளை நிகழ்த்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**01-பெப்-2021 திங்கள்**
**சுபமுகூர்த்த நாள் (காலை 6.00 - 7.30)**
**நல்ல நேரம் : 6.00 - 7.30**
**எமகண்டம் : 10.30 - 12.00**
**திதி : சதுர்த்தி**

## இன்றைய ராசிபலன்

**01.02.2021**

**மேடம்**
மனதில் மகிழ்ச்சி நிலவும். பல நாள் எதிர்பார்த்த உயர்வு வரும். திட்டங்கள் தீட்டுவீர்கள். பணியிடத்தில் பாராட்டின் அடையாளமாக சிறு பரிசு வரும்.

**இடபம்**
பிள்ளைகள் கற்பார்கள்.சொத்து விற்பனை மூலம் ஒரு பெரும் தொகை கிடைக்க லாம். பணியிடத்தில் ஏற்பட்ட சந்தேகங்களுக்குத் தீர்வு வரும்.

**மிதுனம்**
தேவையின்றி கடன் வாங்குவதை தவிர்க்கப்பாருங்கள். விட்டு கொடுத்து செல்ல வேண்டி வரும். மற்றவர்கள் செய்த உதவிக்கு இன்று நன்றி சொல்வீர்கள்.

**கடகம்**
சுபநிகழ்ச்சிகளில் சந்தோஷமாக கலந்து கொள்வீர்கள். ஆதரிக்க மாட்டார்கள் என்று நினைத்தவர்களின் அன்பு கிடைக்கும்.

**சிம்மம்**
பெரிய குறிக்கோள்களை தீர்மானித்து புத்திசாலித்தனமாகச் செயல்படுவீர்கள். பிரியமானவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையை அடைவார்கள்.

**கன்னி**
அன்பளிப்பு கிடைக்கும். பழைய மின்னணு சாதனங்களை கொடுத்து புதியது வாங்குவீர்கள். சகாக்களிடையே ஏற்படும் பொறாமை சங்கடம் அளிக்கும்.

**துலாம்**
ஆர்வமில்லாதிருந்த விஷயங்களில் புதிய ஆர்வம் பிறக்கும். திட்டமிட்டுச் செய்த யுக்திகளால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

**விருட்சிகம்**
அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். பயம் நீங்கும். அதிகாரப் பதவியில் இருப்போரிடம் இருந்து நல்ல செய்தி வரும்.

**தனுசு**
வரவு கூடும். புரியாதிருந்த பல விஷயங்கள் விளங்கும். நல்லவர்கள் உதவுவர். சமீபத்தில் சந்தித்த பழைய நட்பால் நன்மை ஏற்படும்.

**மகரம்**
காரிய வெற்றிக்கு கலந்து ஆலோசித்துச் செயல்பட வேண்டிய நாபொறாமைக்காரர்களால் ஏற்பட்ட தொல்லைகள் தீரும். லாபம் வரும்.

**கும்பம்**
சட்டதிட்டத்தை மீற வேண்டாம். குடும்பத்தில் புரிதல் ஏற்படும். குழப்பங்கள் தீரும். கவனமாகச் செயல்பட்டு காத்துக் கொள்வீர்கள்.

**மீனம்**
உழைப்புக்கேற்ற பலன்கள் கிடைக்காத ஏக்கம் ஏற்படும். இன்று நல்ல செய்தி ஒன்று வரும். உங்களின் புகழ் கூடும். ஆரோக்ய நலனில் அக்கறை எடுப்பீர்கள்.

# குறிவைக்கப்படுகிறதா? உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்

## பிக்கு, பொலிஸ், இராணுவம் படையெடுப்பு!

**கிளிநொச்சி, பெப்.01**

**கிளிநொச்சி உருத்திரபுரம் பழமை வாய்ந்த உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தை தொல்லியல் திணைக்களத்தினர், பௌத்த பிக்கு, இராணுவம், பொலிஸார் எனப் பலர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.**

இது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் அருகே தொல்லியல் அடையாளங்கள் இருக்கின்றன என்றும் இதற்காக, நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தொல்லியல் திணைக்களத்தினர் அண்மையில் குறிப்பிட்டனர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் நண்பல் வேளையில் அப்பகுதிக்கு பௌத்த தேரர் ஒருவர் வந்திருந்தார். அவர் வந்து சென்ற சில மணித்தியாலங்களின் பின்னர் அப்பகுதிக்கு பொலிஸார் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து மாலை வேளையில், இராணுவத்தினரும் அங்கு வந்து அந்த இடங்களைப் பார்வையிட்டு சென்றனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தொல்லியல் திணைக்களம் குறித்த சிவன் ஆலய சூழலை இலக்கு வைத்துள்ள நிலையில்



பௌத்த பிக்கு, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் என வரிசையாக திடீரென வந்து ஆராய்ந்து சென்றுள்ளமை தொடர்பில் அப்பகுதியில் அச்சமும் பீதியும் எழுந்துள்ளது. (ஐ)

# யாழ். பல்கலையில் தியாகராஜர் இசை ஆராதனை

யாழ்ப்பாணம், பெப். 01

ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் 174ஆவது பஞ்சரத்தின இசை ஆராதனை இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ். பல்கலைக்கழகம் இராமநாதன் நுண்பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இசைத்துறை தலைவர் செல்வி பரமேஸ்வரி கணேசகம்பர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் புகழ்பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் மங்கல இசையும், ஈழத்தின் தலைசிறந்த இசைக் கலைஞர்கள், விரிவுரையாளர்களின் பங்கேற்பில் பஞ்சரத்தின இசை ஆராதனையும் இட்பெறவுள்ளன. (ஐ)

# தவறணை காவலாளி சடலமாக மீட்பு

தென்மராட்சி, பெப். 01

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கீழுள்ள கள்ளு தவறணையின் காவலாளி சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

சாவகச்சேரியை சேர்ந்த சின்னராசா ஜெகன் (வயது - 39) என்பவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

அவர், இரவு நேரக் கடமையில் நேற்று முன்தினம் இரவு இருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டார்.

இவரின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு உறுதுணையாக நான் இருப்பேன்

## இளைஞர்கள் முன்னிலையில் அமைச்சர் டக்ளஸ்




யாழ்ப்பாணம், பெப். 01

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத்தில் நம்பிக்கையுடன் இணைந்து பணியாற்றி உங்களது எதிர்காலத்தை வெற்றிகொள்ளுங்கள். அதன் வளர்ச்சிக்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் நான் உறுதுணையாக இருப்பேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

யாழ். மாவட்ட இளைஞர் சமேளனத்திற்கான நிர்வாகக் குழு அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், அன்றைய கால அரசியல் நிலைமைகள் என்னை வேறு ஒரு திசை நோக்கி அழைத்துச் சென்றுவிட்டது. அதனால் நாம் திசைதிருப்பப்பட்டு அப்போது எமது மக்களுக்கு இருந்த பிரச்னைக்கு ஆயுத போராட்டமே சரியானதென அன்று அதில் இறங்கியிருந்தோம். ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக இயக்கங்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், சகோதரப் படுகொலைகள் காரணமாக போராட்டம் திசைமாறிவிட்டது.

இந்தநிலையில் 1987 களில் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதை அதிலிருந்து முன்னோக்கிச் செல்லலாம் என்று நாம் அரசியல் ஜனநாயக வழியில் இறங்கியிருந்தோம்.

தேசிய நல்லிணக்கத்தினூடாக எமது மக்களது பிரச்னைக்கு தீர்வு காணலாம் என்ற எண்ணத்துடனேயே அன்று உருவான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டோம். துரதிர்ஷ்டவசமாக தவறான வழிடத்தலால் அந்த வழிமுறை தோற்றுவிட்டது. ஆனாலும் தமிழ் மக்கள் தோற்றுவிடவில்லை.

அந்தவகையில் நீங்கள் ஒவ்வோருவரும் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் இந்த இளைஞர் மன்றத்தில் இணைந்து அதனூடாக உங்களது பிரச்னைகளுக்கு தீர்வுகளை காணமுடியும் என்ற நம்பிக்கையை நான் உங்களிடம் தெரிவிக்கின்றேன்.

நாமல் ராஜபக்ச என்ற ஒரு சிறந்த அமைச்சர் உங்களுக்காக உள்ளார். அவர் தமிழ் மக்களின் பிரச்னைகளை தெளிவாகப் புரிந்துகொண்டவர். ஓர் அறிவாந்த, தற்துணிவுள்ள அமைச்சராகவும் அவர் இருப்பதால் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் அனைத்துக்கும் இலகுவாக தீர்வுகளை காண முடியும். அத்துடன் அவர் உங்களுக்காக முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு நானும் துணை நிற்பேன் - என்றும் கூறினார். (ஐ)

# ரூ. 500இற்கு குறைவாக உழுந்தை விற்காதீர்கள்

**விவசாயிகளுக்கு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவுறுத்து**

வவுனியா, பெப். 01

**விவசாயிகள் ஒருகிலோ உழுந்தை 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்து இலாபமீட்ட வேண்டும் என்று வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

“2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசு உழுந்து இறக்குமதியை நிறுத்தியது. இதையடுத்து 16 உற்பத்திகளுக்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், உழுந்துக்கு 220 ரூபா உத்தரவாத விலை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது சில்லறை விலையாக ஒரு கிலோ உழுந்து சில மாபியாக்களால் 2000 ரூபாய்க்கு விற்கப்படுவதால் உழுந்தை இறக்குமதி செய்யவேண்டும் எனப் பலரும் கூறி வருகின்றனர்.

“இம்முறை உழுந்து விதையை ஆயிரக்கணக்கில் கொடுத்து வாங்கி பயிர்செய்தும் விளைச்சலில் பெரும் வீழ்ச்சி எதிர்நோக்கப்பட்டுள்ளது. சராசரியாக ஓர் ஏக்கருக்கு 350 கிலோ உழுந்து கிடைக்க வேண்டும். ஆனால், மழையின் பாதிப்பால் 150 கிலோ தொடக்கம் 250 கிலோ வரையிலான விளைச்சல் மட்டுமே கிடைக்கின்றது. பல இடங்களில் பெரும் அழிவும் ஏற்பட்டுள்ளது. காப்புறுதியை அறிமுகப்படுத்தியும் பலர் ஆர்வம் காட்டவில்லை.

மிக விரைவில் அநுராதபுர மாவட்ட உழுந்தும் சந்தைக்கு வரவுள்ளது. அங்கும் விளைச்சல் குறைவு என்பதுடன் பாதிப்புக்களும் உள்ளது.

இவ்வளவு இடர்களுக்கும் மத்தியில் உழுந்தை உற்பத்தி செய்தால், மாபியாக்களால் மொத்த கொள்வனவு விலையானது கிலோவுக்கு 1300 ரூபாவிலிருந்து 350 ரூபாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது, உற்பத்திகள் சந்தைக்கு வரும்போது வழமையாக இடைத்தரகர்களால் மேற்கொள்ளப்படும் மாபியா வேலையே.

எனவே, விவசாயிகள் இயலுமானவரை தமது உற்பத்திகளை விற்பனை செய்யாது சிறிது காலம் பாதுகாப்பாக வைத்திருந்து விற்பனை செய்வதுடன், சில்லறை விற்பனையிலும் ஈடுபட முடியும்.

விவசாயிகளை பாதுகாப்பதற்காகவே ஒரு கிலோ உழுந்திற்கு குறைந்தபட்சம் 460 ரூபாய் விலையை வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம் அறிவித்திருந்தது. விவசாய திணைக்கத்தின் விதைகள் பிரிவும் விரைவில் விதை நோக்கத்திற்காக கொள்வனவை ஆரம்பிக்க உள்ளனர். இதன் போது குறைந்தபட்சம் 600 ரூபாயாக நிர்ணயிப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

உழுந்து வடையும், தோசையும் உண்பது சாமான்யனின் கனவாக மாறியுள்ளதையும் கருத்தில்கொண்டு, நுகர்வோருக்கும் பாதிப்பின்றி, விவசாயிகள் உழுந்தை இடைத்தரகர்கள் இன்றி நேரடி விற்பனையில் ஈடுபட வேண்டும்.

இவ்வருடம் ஜனவரியில் வவுனியா செட்டிகுள பிரதேச விவசாயிகள் அனைவரும் இணைந்து குறைந்தபட்சம் ஒரு கிலோ உழுந்தை 500 ரூபாவாக விற்பதாக தீர்மானம் எடுத்துள்ளார்கள்.

இயலுமானவரை 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்து இலாபத்தைப் பெற்றுக்கொள்ள விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் கமநல சேவைகள் நிலையத்திற்கு 460 ரூபாய் வீதம் கையளிக்க முடியும்” -என்றார். (ஐ)



# அபயதிஸ்ஸ தேரர் குழு குருந்தூர்மலை சென்றது

முல்லைத்தீவு, பெப். 01

முல்லைத்தீவு மாவட்டத்தில் அகழ்வு ஆராய்ச்சி பணிகள் முன்னெடுக்கப்படும் குருந்தூர் மலைக்கு பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட பௌத்த மதகுருமார்கள் படை அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டனர்.

குருந்தூர் மலையின் அடிவாரப் பகுதியில் பொலிஸார், படையினர் கடமைகளில் நின்ற போதும் எந்த வித தடையும் இன்றி தேரர்கள் மலைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் அங்கு அவர்களுடன் செல்ல முயன்ற தமிழ் செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் அவர்கள் அனைவரையும் கட்டாயப் பதிவுக்கும் உட்படுத்தினர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, குருந்தூர் மலையைப் பார்வையிட்டு வந்த தேரர்களை படம் எடுக்க வேண்டாம் என்று அங்கு கடமையில் நின்ற பொலிஸார் செய்தியாளர்களை எச்சரித்தனர். (ஐ)



# தொடர்ச்சியாக சங்கிலி அறுத்து கைவரிசை காட்டிய குழு சிக்கியது

**சங்கிலி, மோ.சைக்கிளுடன் கைக்குண்டும் மீட்பு**

தொடர்ச்சியாக சங்கிலி அறுப்புச் சம்பவங்களில் ஈடுபட்ட மூவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் இருந்து தங்கச் சங்கிலிகள், மோட்டார் சைக்கிளுடன் கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒருவார காலப்பகுதியில் வவுனியா வேப்பங்குளம், சாந்தசோலை, இறம்பைக்குளம் பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் இருவர், வீதியில் பயணிக்கும் பெண்களிடம் தங்கச் சங்கிலிகளை அறுத்து கைவரிசை காட்டி வந்தனர்.

இது தொடர்பில், பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா பொலிஸில் முறைப்பாடு அளித்திருந்தனர். இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர்.

இதன் அடிப்படையில் மதவாச்சி மற்றும் கொழும்பு பகுதிகளை சேர்ந்த மூன்று பேரை அவர்கள் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 9 பவுண் தங்கச் சங்கிலிகள், கைக்குண்டு, வாகன இலக்கத்தகடுகள், மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானவடுவின் தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் அழகியவண்ணவின் வழிகாட்டலில் சார்ஜன்ட்களான திஸநாயக்க, விக்கிரமசூரிய, குமணசேகர, சதுரங்க, கான்ஸ்டபிள்களான தயாளன், ரணசிங்க, தம்மிக, சமீர, மொறவக்க, அமரசூரிய ஆகியோர்களை கொண்ட குழு இந்தக் கைது சம்பவத்தில் ஈடுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வவுனியாவில் 905 பேருக்கு தடுப்பூசி

வவுனியா, பெப். 01

வவுனியாவில் 905 பேருக்கு கொவிட் - 19 தடுப்பூசி நேற்று முன்தினம் செலுத்தப்பட்டது. வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவ சேவையாளர்கள், சுகாதார துறையினர் மற்றும் இராணுவத்தினருக்கே இவ்வாறு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இந்தியா வழங்கிய தடுப்பூசிகளில் ஆயிரத்து 700 டோஸ்கள், வவுனியா மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. வவுனியா மருத்துவமனை, வன்னி இராணுவ வைத்தியசாலையில் இந்தத் தடுப்பு மருந்துகள் முதல்கட்டமாக ஏற்றப்பட்டன.

இதன் போது 297 பேர் வவுனியா வைத்தியசாலை சார்ந்தவர்களும் 108 பேர் சுகாதார துறை சார்ந்தவர்களுமாக 405 பேருக்கு வவுனியா வைத்தியசாலையிலும், 500இராணுவத்தினருக்கு வன்னி இராணுவ வைத்தியசாலையிலும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (ஐ)

# புதுக்குடியிருப்பு மாணவர்களுக்கு மிதிவண்டிகள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, பெப். 01

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் இ. சந்திரரூபனால் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு 10 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.



ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட வித்தியாபுரம், கற்சிலைமடு, கூழாமுறிப்பு, புளியங்குளம்,போன்ற கிரமாங்களை சேர்ந்த உதவி தேவைப்படும் மாணவர்களை இனம் கண்டு அவர்களின் கற்றல் செயலை இலகுபடுத்தும் வகையில் இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து தனது பிரதேச சபை ஊதியத்தை முழுமையாக மக்கள் சேவைக்காகவே இவர் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





பருத்தித்துறை நகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினரான வின்சன் டி போலின் மறைவுக்கு சபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டபோது... (படங்கள் - வடமராட்சி செய்தியாளர்)

# கொழும்பு துறைமுகத்தை பாதுகாக்க நாடு தழுவியளவில் இன்று போராட்டம்

## ஜே.வி.பி. அழைப்பு



கொழும்பு, பெப். 01

கொழும்பு துறைமுகத்தை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதற்காக, இன்று நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்வதென்பது, கொழும்பு துறைமுகத்தையே விற்பனை செய்வதற்கு ஒப்பான செயலாகும் என்றும் முதலீடு, குத்தகை என்ற போர்வையில், கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு தாரை வார்ப்பதற்கே இந்த அரசாங்கம் முயல்வதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாட்டை ஆளும் அதிகாரத்தை, மக்கள் 5 வருடங்களே இந்த அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர் என்றும் ஆனால் தாங்கள்தான் நாட்டில் சொந்தக்காரர்கள் என்ற போர்வையில், ஆட்சியாளர்கள் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கும், பல்தேசியக் கம்பனிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு இடமளிக்ககூடாது. தேசிய வளங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையை தோற்கடிக்க வேண்டும். குறிப்பாக, கொழும்பு துறைமுகத்தை பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இன்று நாடு தழுவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும். நாட்டை நேசிக்கும் ஒவ்வொரு பிரஜையும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்" என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

# 20மி.மி. அல்லது 20 கிராமுக்கு குறைந்த

# பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தடை: மீறினால் இரண்டு ஆண்டுகள் சிறை!

கொழும்பு, பெப். 01

**தனி பாவனை மற்றும் குறுங்கால பாவனைக்கான பிளாஸ்ரிக் பொருட்கள் மீதான தடையை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை தெரிவித்துள்ளது.**

தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு உள்ள அதிகாரங்களின்படி இந்த ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்து இரண்டு விசேட வர்த்தமானி அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய, 20 மில்லிமீற்றர் அல்லது 20 கிராம் நிறைக்கு குறைவான சிறிய பக்கெற், காற்றடைக்கப்படக்கூடிய விளையாட்டு பொருட்கள், பிளாஸ்ரிக் காம்புகளுடனான காது துடைப்பான்கள் ஆகியவை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் தடை செய்யப்படவுள்ளதாக குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாய துறையில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்களை சேமிக்கப் பயன்படுத்தப்படும் பி.ஈ.ரி. மற்றும் பி.வி.ஸி. பிளாஸ்ரிக்குகளும் தடைசெய்யப்படவுள்ளன.

சுற்றுச்சூழல் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவிப்புகளின் விதிமுறைகளை மீறும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

# பரீட்சை பெறுபேறு அனுப்பி வைப்பு

கொழும்பு, பெப். 01

அரச பொது நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவிற்கு பரீட்சையின் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தெரிவுகள் இடம்பெற்ற பின்னர் பரீட்சை பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பீ. பூஜித தெரிவித்துள்ளார்.

அரச பொது நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டி பரீட்சை கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுய தனிமைப்படுத்தப்பட்டோரை கண்காணிக்க சிவில் உடை பொலிஸ்

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண

கொழும்பு, பெப். 01

கொரோனா தொற்றால் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டோரை கண்காணிக்க, சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்ற பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பிரிவினர் வழங்கிய சுகாதார விதிமுறைகளை சிலர் மீறி நடப்பதாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விசேட கண்காணிப்பில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மிருகக்காட்சி சாலைகள் இன்று திறக்கப்படும்

கொழும்பு, பெப். 01

கொரோனா தொற்று பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த மிருகக்காட்சிசாலைகள் இன்று முதல் திறக்கப்படுகின்றன.

இதற்கமைவாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் செயல்படும் தெஹிவளை, பின்னவளை மற்றும் ரிதியகம மிருகக்காட்சிச் சாலைகள் திறக்கப்படவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் விமல் வீர திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், மிருகக் காட்சி சாலைகளை பார்வையிடுவோர் சுகாதார விதிகளை கட்டாயம் பின்பற்றினால் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தடைகள் மீதான அச்சத்தால் குற்றங்களை ஏற்கமாட்டோம்

## சீனாவும் ரஷ்யாவும் எங்களுக்காக உள்ளன என்கிறார் அமைச்சர் சரத்

கொழும்பு, பெப். 01

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கு இலங்கை சமர்ப்பித்துள்ள பதில் அறிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகும் அரசாங்கத்தின் முடிவு புத்திசாலித்தனமானது என தெரிவித்துள்ள அமைச்சர் தற்போது எங்களால் சுதந்திரமாக பதில்களை வழங்க முடியும் அதனையே நாங்கள் செய்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை எழுப்பிய கேள்விகளிற்கு முன்னைய அரசாங்கத்தால் உரிய பதில்களை வழங்க முடியவில்லை என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து விலகும் முடிவு எங்களுக்கு உதவியுள்ளது மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை கொண்டுவரலாம் ஆனால், நாங்கள் அதற்கு கட்டுப்படவேண்டியதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னர் இணை அனுசரணை வழங்கியதால் எங்களிற்கு பொறுப்பு இருந்தது. தற்போது எங்களுக்கு அது இல்லை. குற்றச்சாட்டு குறித்து நாங்கள் பதில் அளிக்கலாம்.

தடைகள் ஏதாவது விதிக்கப்படுவது என்றால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையே தடைகளை விதிக்கவேண்டும். எங்களுக்கு ரஷ்யாவும் சீனாவும் பாதுகாப்புச் சபையில் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தடைகள் குறித்த அச்சம் காரணமாக நாங்கள் இழைக்காத குற்றங்களை இழைத்ததாக நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்றும் அவர் மேலும் சொன்னார்.

# தேசிய கொடிகளை பறக்கவிட கோரிக்கை

கொழும்பு, பெப். 01

73ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வீடுகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வாகனங்களில் தேசியக் கொடியை பறக்கவிடுமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ஒரு வாரத்திற்கு தேசியக் கொடியை பறக்கவிடுமாறு தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களின் கட்டடங்களை எதிர்வரும் 3 ஆம் 4 ஆம் திகதிகளில் ஒளி விளக்குகளால் அலங்கரிக்குமாறும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# 39 விமான சேவைகள் மூலம் நேற்று பயணம்

கொழும்பு, பெப். 01

நேற்று காலை 8.30 மணிவரை 39 விமான சேவைகள் மூலம் 135 பேர் பயணித்துள்ளனர் என்று கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று அச்ச நிலைமை காரணமாக, 681 பேர் 20 விமானங்களின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர். இதேபோன்று தொழில் நிமித்தம் கட்டாருக்குச் சென்றிருந்த நிலையில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர் எனக் கூறப்படும் 293 பேர் நாடு திரும்பியுள்ளனர் எனது தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் ஊடாகவே நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (ஐ)

# மீண்டும் குலுங்கியது வலப்பனை பிரதேசம்

நுவரெலியா, பெப். 01

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேசத்தில் மீண்டும் நேற்று சிறியளவிலான நில நடுக்கம் பதிவாகியுள்ளது.

பசறை - மடுல்சீமை பொலிஸின் அதிகார பிரிவிற்குட்பட்ட எக்கிரிய மற்றும் அதனை சூழவுள்ள சில கிராமங்களில் சிறிய அளவிலான நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

றிச்டர் அளவில், 2 மெக்னிரியூட் அளவில் நடுக்கம் உணரப்பட்டதாகப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் இப்பிரதேசத்தில் இவ்வாறானதொரு நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் தற்போது மீண்டும் சிறிய அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. எவ்வாறெனினும், இது தொடர்பில் அச்சமடைய தேவையில்லையென புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எத்தனை ஆணைக்குழு வந்தாலும் அவற்றால் எமக்கு தீர்வு கிட்டாது

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

**அக்கரைப்பற்று, பெப். 01**

**"எத்தனை ஆணைக்குழுக்கள் வந்தாலும் அவற்றால் எமக்கு தீர்வு இல்லை. சர்வதேச விசாரணைப் பொறிமுறையே எமக்கு வேண்டும்", என்று அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி குறிப்பிட்டார்.**




நேற்று நண்பகல் திருக்கோவில் பிரதேசத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ள தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, போர் காலத்தில் பாதுகாப்பு செயலாளராக இருந்தபோதுதான் எனது கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்தேன். எனது கணவர் எங்கே என்று சொல்ல முடியாத ஜனாதிபதியால் ஆணைக்குழுவை நியமித்து எந்த ஒரு பிரயோசனமும் இல்லை. இது வெறும் கண்துடைப்பு. கடந்த பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் எந்த ஒரு தலையீடும் தேவையில்லை என்ற இலங்கை அரசாங்கம், அவசர அவசரமாக ஆணைக்குழுவை நியமித்தது எதற்காக?

உள்ளக பொறிமுறை என்பது தேவையற்ற ஒன்று. எத்தனை ஆணைக்குழுக்கள் வந்தாலும் எமக்கு எந்த ஒரு தீர்வும் கிடைக்கப் போவதில்லை. எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கவுள்ள மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு முன்பு அவசர அவசரமாக அமைக்கப்பட்டுள்ள உள்ளக பொறிமுறை எமக்கு தேவையில்லை. எமக்கு சர்வதேசப் பொறிமுறையும் சர்வதேச விசாரணையும் தான் நீதியை பெற்று தரும். சர்வதேசத்தையும் தமிழர்களையும் அடி முட்டாளாக்கும் செயலைத்தான் தற்போது ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார்.

தமிழர்களாகிய எங்களுக்கு நடமாடும் சுதந்திரம் இல்லை. இந்த தேசத்தில் வாழக்கூடிய சுதந்திரம் இல்லை. அவ்வாறான எங்களுக்கு சுதந்திர தினம் எதற்கு? நாங்கள் சுதந்திரத்தை பெறவில்லை. தற்போது வரை எனது வீட்டை சுற்றி இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நான் ஆயுதம் ஏந்திப் போராடவரவில்லை. எனது கணவரை ஒப்படைத்த ஜனாதிபதியிடம் எனது கணவர் எங்கே என்று கேட்கின்றேன் - என்றார். (ஐ)



## வாவியருகே சடலம் மீட்பு

மட்டக்களப்பு, பெப். 01

மட்டக்களப்பு வாவியருகே ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கண்ணகையம்மன் கோவில் வீதியை அண்டியுள்ள வாவியருகே அடையாளம் காணப்படாத ஆணொருவரின் சடலம் கிடப்பதாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அந்த இடத்துக்கு சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

உயிரிழந்தவர் 60 வயதைக் கடந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அத்துடன் சடலத்தை அடையாளம் காண உதவுமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

## காத்தான்குடி தொடர்ந்தும் சிவப்பு வலயமாகவே இருக்கும்

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

மட்டக்களப்பு, ஜன. 01

காத்தான்குடி பிரதேசம் தொடர்ந்து சிவப்பு வலயமாகவே இருந்து வருகின்றது என்று கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் அழகையாலதாகரன் தெரிவித்தார்.

காத்தான்குடி தவிசாளரினால் வெளியிடப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் பகுதியை நீக்குவதற்கான அறிவிப்பானது சட்ட ரீதியற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கொரோனா செயலணியின் அறிவுறுத்தல் இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியின் அறிவிப்பை நீக்க உள்ளூராட்சி மன்ற தலைவர்களுக்கு அதிகாரம் இல்லை. காத்தான்குடி தவிசாளர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, கிண்ணியா, அம்பாறை, காரைதீவு, அக்கரைப்பற்று, காத்தான்குடி, குச்சவெளி ஆகிய ஏழு பகுதிகள் தொடர்ந்து சிவப்பு வலயங்களாக இருந்து வருகின்றன. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 329பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காத்தான்குடியில் 10கிராம சேவையாளர் பிரிவுகள் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு நகரில் ஒரு கிராம சேவையாளர் பகுதியின் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. சில பகுதிகளில் சில மக்களாலும் சில குழுக்களாலும் எங்களது சேவைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டாலும் தொடர்ச்சியாக சுகாதார சேவைப் பிரிவின் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உள்ள காத்தான்குடியில் ஒரு நாளைக்கு குறைந்தது 150இற்கும் மேற்பட்ட பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். ஆனால், 80 பரிசோதனைகளே இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

காத்தான்குடி பிரதேசத்தில் அன்ரிஜென், பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பின்னரே இந்தப் பகுதிகளை விடுவிப்பதா இல்லையா என்ற முடிவு எடுக்கப்படும் - என்றார். (ஐ)

## முடக்கம் நீடித்த காத்தான்குடியில் வர்த்தக நிலையங்கள் நேற்று திறப்பு


மட்டக்களப்பு, பெப். 01

கடந்த ஒரு மாதகாலமாக முடக்கப்பட்ட காத்தான்குடி பிரதேசத்தின் 7 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று விடுவிக்கப்பட் டன. எனினும் மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் தொடர்ந் தும் முடக்கம் நீடிக்கின்றது. காத்தான்குடி பிரதேச சபையின் தவிசாளரின் முடிவுக்கு அமை யவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கொரோனா தொற்று அச் சம் காரணமாக காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி 18 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டன.

இதில் 8 கிராம சேவகர் பிரிவுகளில் நீடித்த முடக்கம் கடந்த 22ஆம் திகதி நீடிக்கப் பட்டது. ஏனைய 10 கிராம சேவகர் பிரிவுகளில் முடக்கம் நீடித்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் 7 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கத்திலிருந்து நீக்கப் பட்டன. இதைத் தொடர்ந்து அப்பகுதியின் வர்த்தக நிலையங்கள் வழமைபோன்று திறக்கப்பட்டன. போக்குவரத்துக் களும் வழமைக்குத் திரும்பின.



எனினும், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பொதுச் சந்தை கள் பாடசாலைகள், மதராஷாக்கள், பள்ளிவாசல்கள், பாலர் பாடசாலைகள் மறு அறிவித் தல் வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

## திருமலையில் இரத்த தானம்

திருகோணமலை, பெப். 01

இலங்கை செஞ்சிலுவை சங்கம் திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

46 கொடையாளர்கள் தமது உதிரத்தை வழங்கி வைத்தனர். புதிய வருடத்தின் முதலாவது குருதிக்கொடை முகாம் இதுவாகும்.

கடந்த வருடங்களில் 45இற்கும் மேற்பட்ட குருதிக் கொடை முகாம்களை பல்வேறு பகுதிகளிலும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் திருகோணமலை கிளையினர் நடத்தி வந்தனர்.

திருகோணமலை கிளை நிறைவேற்று அலுவலகர் வர்ணகுலநாதன் தர்மபவனின் ஏற்பாட்டில் இம் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

திருகோணமலை பொது வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினர் கொடையாளிகளிடமிருந்து இரத்தத்தை சேகரித்தனர். (ஐ)



## திருக்கோவிலில் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனம்!

அக்கரைப்பற்று, பெப். 01

பட்டதாரி பயிலுநர்களுக்கான இரண்டாம் கட்ட அரச நியமனங்கள் திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் கொள்கை திட்டம் ஊடாக அரசாங்கத்தால் பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இதன் பிரகாரம், திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் முதற்கட்ட நியமனங்களில் பெற்றுக்கொள்ள தவறிய 9 பட்டதாரிகளுக்கே, பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு, திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் நடைபெற்றதுடன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

உதவிப் பிரதேச செயலாளர் கே.சதீசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, சமூர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## வாழைச்சேனையில் மணல் அகழ்வு: இரவிரவாக மக்கள் போராட்டம்

வாழைச்சேனை நாசிவன்தீவு கிராமத்தில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வை தடுத்ததுடன் இரவு முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் இடம்பெறம் மணல் அகழ்வை தடுக்குகமாறு வாழைச்சேனை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மக்கள் தெரிவித்தனர். இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இதனை தீர்மானமாக நிறைவேற்றியிருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மணல் ஏற்றும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டனர். இதை அறிந்து அப்பகுதியில் மக்கள் கூடி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அத்துடன் மணல் அகழ்வை தடுக்கக் கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த விடயத்தில் பொலிஸார் தலையிட்டு, அகழப்பட்ட மணலை அங்கேயே கொட்ட வைத்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தனர். (ஐ)

**“இந்தோ-பசிபிக் பிராந்தியம் தொடர்பான ட்ரம்ப் நிர்வாகத்தின் மதிப்பீடு தொடர்பான இரகசிய ஆவணம் பகிரங்கப்படுத்தப்பட்ட நாளுக்கு அடுத்த நாளே கம்ப்பல் ‘இந்தோ-பசிபிக்’ ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். இந்தப் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்குக்கு ஈடுகொடுக்கும் சக்தியாக இந்தியாவை அந்த ஆவணம் குறிப்பிட்டிருந்தது. சீனாவின் உய்கர் முஸ்லிம்கள் மிகக் கொடுமையான விதத்தில் நடத்தப்படுவது குறித்து அதிபர் பைடனும் ஏனையோரும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள்.”**

# இந்தோ - பசிபிக் பிராந்தியத்தை எப்படிப் பார்க்கிறார் பைடன்?

அமெரிக்க அதிபர் பைடனின் நிர்வாகம் எப்படிச் சிந்திக்கும் என்பது குறித்து இந்திய அரசியல் தலைவர்கள், வெளியுறவுத் துறையினர், இதழாளர்கள், அறிஞர்கள் போன்றோருக்குத் தற்போது ஒரு தெளிவான பார்வை ஏற்பட்டிருக்கும். இவர்களில் சிலர் பைடனைச் சந்தித்திருக்கிறார்கள். மற்றவர்கள் வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கென், சி.ஐ.ஏ இயக்குநர் வில்லியம் பர்ன்ஸ் போன்றோரில் தொடங்கி பருவநிலை மாற்றத்துக்கான சிறப்புத் தூதர் ஜோன் கெரி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், அமெரிக்காவின் ‘இந்தோ-பசிபிக் ஒருங்கிணைப்பாளர்’ கூர்ட் கம்பல் ஆகியோரைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்கள்.

பராக் ஒபாமாவின் துணை அதிபராக இருந்த நாட்களின் அடிப்படையில் அதிபர் பைடனுக்கு இந்திய-அமெரிக்க உறவு குறித்துத் தெளிவான கருத்து இருக்கிறது. மிக முக்கியமாக, செனட்டின் வெளியுறவுத் துறைக் குழுவின் தலைவராக இந்தியாவுக்கு எதிரான அணுசக்தித் தடைகளுக்கு முடிவு கட்டும்படி அப்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைத் தூண்டுவதில் பைடன் முக்கிய பங்கு வகித்தார்.

அதிபரின் கருத்துகள், முக்கியமான வெளியுறவுத் துறைக் கொள்கை, தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான சிக்கல்கள் போன்றவற்றுடன் பழக்கமாகும்வரை துணை அதிபர் கமலா ஹாரிஸ் எச்சரிக்கையாகவே இருந்து வந்திருக்கிறார்.

கூர்ட் கம்பல் அண்மையில் எழுதிய கட்டுரை ஒன்றில் சீனாவுடன் ஐரோப்பிய ஒன்றியம் செய்து கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த அக்கறைகளைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஐரோப்பிய சக்திகள் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீது தீவிர அவநம்பிக்கையும் வெறுப்பும் கொண்டிருந்தன. பைடனின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் கம்பல் சீனா குறித்த அமெரிக்க - ஐரோப்பிய கொள்கைகளையும் இந்தோ - பசிபிக் தொடர்பான கொள்கைகளையும் ஒன்றிணைப்பது தொடர்பாக பார்வைகளைக் கொண்டிருக்கிறார். இந்தோ - பசிபிக் பிராந்தியம் தொடர்பான ட்ரம்ப் நிர்வாகத்தின் மதிப்பீடு தொடர்பான இரகசிய ஆவணம் பகிரங்கப் படுத்தப்பட்ட நாளுக்கு அடுத்த நாளே கேம்ப்பல் ‘இந்தோ - பசிபிக்’ ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். இந்தப் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்குக்கு ஈடுகொடுக்கும் சக்தியாக இந்தியாவை அந்த ஆவணம் குறிப்பிட்டிருந்தது. சீனாவின் உய்கர் முஸ்லிம்கள் மிகக் கொடுமையான விதத்தில் நடத்தப்படுவது குறித்து அதிபர் பைடனும் ஏனையோரும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

சிந்து மாகாணத்தில் இரண்டு இடங்களில் சீனாவுக்கு கடற்படைத் தளங்களை பாகிஸ்தான் தரும் தருணத்தில் குவாடின் (Quad: அமெரிக்கா, அவுதிரேலியா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான கூட்டு) முக்கியத்துவத்தை பைடன் அங்கீகரிப்பதையும் தெளிவாக உணர முடிகிறது. இந்தத் துறைமுகங்கள் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள சீனக் கப்பற்படைத் தளத்துக்கான தளவாடங்களைக் கொடுத்து உதவும்.

### ஆப்கன் கொள்கை

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் விவகாரங்கள் குறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் கொண்டிருக்கும் பார்வையானது ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற அமெரிக்க இராணுவத்தின் மத்திய கமாண்டின் தலைவராக இருந்தபோது அவர் கொண்டிருந்த பார்வையைப் பெரிதும்



பிரதிபலிக்கிறது. அவருடைய பார்வைக்கும் அவர் ஓய்வுபெற்ற பிறகு பென்டகன் கொண்டிருந்த பார்வைக்கும் வேறுபாடு உண்டு.

ஆஸ்டின் இவ்வாறு அறிவித்தார்: “நமது பொதுவான நலன்களில் நான் கவனம் செலுத்துவேன். சர்வதேச ராணுவக் கல்விக்கும் பயிற்சிக்குமான நிதிகளைப் பயன்படுத்தி பாகிஸ்தானின் எதிர்கால இராணுவத் தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பதை இது உள்ளடக்கும். ஆப்கானிஸ்தானில் ஏற்படக்கூடிய அரசியல் தீர்வில் பாகிஸ்தான் முக்கியமான பங்கு வகிக்கும்.”

வெள்ளை மாளிகையோ ஆஸ்டினின் இந்தக் கருத்துகளை ஒதுக்கிவிட்டது “பிராந்திய வெளியுறவு முயற்சி ஒன்றுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும். அது இரண்டு தரப்புகளும் நீடித்த, நியாயமான அரசியல் தீர்வையும் நிரந்தரப் போர்நிறுத்தத்தையும் எட்டுவதற்கு உதவும்” என்று அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் குறிப்பிட்டார். பாகிஸ்தானில் உள்ள தலிபான்களுக்கும் அவர்களின் புரவலர்களுக்கும் மேலும் எச்சரிக்கை விடுக்கும் வண்ணம் அங்குள்ள பெண்களையும் சிறுபான்மைக் குழுக்களையும் அமைதிச் செயல்பாட்டின் அங்கமாகப் பாதுகாப்பதைப் பற்றியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆலோசித்தார். இது இயல்பாகவே ஆப்கான் அதிபர் கனியால் வரவேற்கப்பட்டிருக்கிறது, அவரும் ஆப்கானுக்கான ட்ரம்ப் நிர்வாகத்தின் தூதருமான ஜல்மய் கலீல்ஸாதும் தலிபான்களாலும் பாகிஸ்தான் இராணுவத்தாலும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

### பைடன் - இந்தியா

“அதிபர் பைடன் இந்தியாவுக்குப் பலமுறை சென்றிருக்கிறார். இருநாட்டுத் தலைவர்களும் நேரெதிர்க் கொள்கைகள் கொண்டிருந்தாலும் அவர்களுக்கிடையிலான உறவு நெடியது, வெற்றிகரமானது. இதை அதிபர் பைடன் மதிக்கிறார். அது தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்” என்று வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் ஸாக்கி வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவிலிருந்து இந்தியா ஆயுதங்கள் வாங்குவது தொடர்பாக அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரச்னைகள் தொடரவே செய்யும். இந்தியாவுடனான ‘சிறப்பு உறவு’க்கு முடிவுகட்டும்படி சீனத் தலைமையால் தூண்டப்பட்டதால் ரஷ்ய அதிபர் புதிட்டினும், மிக முக்கியமாக, அதிகமாகப் பேசும் அவரது வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லேவ்ராவும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு குறித்து நியாயமற்ற, அவசியமற்ற கருத்துகளைக் கூறினார்கள்.

இந்தியாவின் எதிர்வினை கூர்மையாக இருந்தது, லேவ்ராவின் விளக்கத்துடன் இந்த விஷயம் முடிவுக்கு வந்தது. ஆனால், ரஷ்யாவிடமிருந்து ‘எஸ்-400 தரையிலிருந்து வான் நோக்கிப் பாயும் ஏவுகணை’யை இந்தியா வாங்கியதனால் பிரச்னைகள் ஏற்பட்டன. இந்த ஏவுகணை அமெரிக்க ஏவுகணைகளைக் கண்காணித்து அவற்றைத் தரையில் வீழ்த்தக் கூடியது. இது ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுகிறது. ரஷ்யாவின் ஆயுதங்களை வாங்கும் எந்த நாட்டுடனும் ஆயுத உறவு வைத்துக்கொள்வதை அமெரிக்கச் சட்டம் தடுக்கிறது.

எஸ்-400 ஏவுகணை ஒப்பந்தம் என்பது மாற்றத்தக்கதல்ல என்பதையும் ரஷ்யாவிலிருந்து நமக்கு விருப்பமானவற்றை வாங்குவதற்கான உரிமை நம்மிடமே உள்ளது என்பதையும் அமெரிக்காவிடம் நாம் தெளிவுபடுத்தியிருந்திருக்க வேண்டும். எதுவாக இருந்தாலும், நமது நீர்மூழ்கிகள், போர்க் கப்பல்கள், ஏவுகலங்கள், டாங்கிகள், பெருந்துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களில் ரஷ்யாவின் பங்களிப்பு இருக்கிறது. பிரான்ஸூம் இஸ்ரேலும் கூட இந்தியாவிடம் பெருமளவில் ஆயுதங்கள் விற்கும் நாடுகளாக இருக்கின்றன. ரஷ்யா, பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகள் நமது தேசிய பாதுகாப்பு தொடர்பான விஷயத்தில் நம்பகத்தன்மை கொண்ட கூட்டாளிகளாக வெகு காலம் இருந்துவருகிறார்கள். இந்தியா தனது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் இன்றியமையாத விஷயங்களில் பிற நாடுகள் கொடுக்கும் அழுத்தத்துக்கு அடிபணிந்து தனது வெளியுறவு உத்திரீதியிலான சுதந்திரத்தில் சமரசம் செய்துகொள்ளக் கூடாது.

### எல்லைப் பதற்றங்கள்

நாளுக்கு நாள் தனது அதிகாரப் பசியை அதிகரித்துக் கொண்டிருக்கும் சீனா, இந்தியாவுடனான தனது எல்லையில் பாதுகாப்புச் சூழலைப் பதற்றத்திலேயே வைத்திருக்கும் உறுதிப்பாட்டோடு உள்ளது என்று நம்புவதற்குப் பல காரணங்கள் உள்ளன. லடாக்கில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டில் ஊடுருவ முயன்றபோது முற்றிலும் எதிர்பாராத, வலுவான எதிர்ப்பை சீனா எதிர்கொண்டது. கடல் பிரதேசத்தில் சீனா செய்துவரும் அத்துமீறல்கள் தொடர்பாக அதனை எதிர்கொள்ள குவாட் நாடுகள் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தீட்ட வேண்டும். ஜப்பான், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேசியா, புருணை என்று அனைத்து அண்டை நாடுகளின் கடல் எல்லையிலும் சீனா அத்து
மீறல் செய்திருக்கிறது.

தாய்வான் தனது கடல் பாதுகாப்பை வலுப்படுத்தவும் கப்பற்படை, விமானப் படையை வலுப்படுத்தவும் அமெரிக்கா எப்போதுமே உதவக்கூடும். இந்தியாவும், தைவானின் மின்னணுவியல் துறையின் பலத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் - பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது நமது மின்னணுவியல் துறையையும் வலுப்படுத்த உதவும். இந்த நகர்வு வெகு காலம் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.

**- ஜி. பார்த்தசாரதி**
பாகிஸ்தானுக்கானமுன்னாள் இந்திய தூதர்,
(‘தி பிஸினஸ்லைன்’)

ஈழநாடு



# தியாகராஜ உற்சவம்

மாலி

# இந்தியாவில் கட்சிகளின் ‘நதிமூலம்’?

**தை** மாதத்தில், திருவையாறு காவேரிக் கரையில் ஐந்து தினங்கள் நிகழும் தியாகராஜ உற்சவம், இம்முறை இரண்டு தினங்களே நிகழ்கின்றது. இன்றும் நாளையும் இது நடைபெறுகிறது. கொரோனா விதிக்கும் கட்டுப்பாடு இது.

திருவையாறு தியாகராஜ ஆராதனைதான் சுதந்திரத்துக்கு முன்னரேயே, இந்தியாவில் கட்சிகள் உருவாகவும் கால்கோளிட்டதோ!

அப்படியானால், காவேரி நதிதான் கட்சிகளின் ‘நதி மூலம்’?

உலகின் அதி உன்னதமான பாரம்பரிய இசைவடிவமொன்றாக திகழும் கர்நாடக இசையின் உலகளாவிய முகம் ஒன்றாகவும், அந்த இசை வடிவத்தின் தாத்பரியத்தையும் பெறுமானத்தையும் எளிதே உணர்த்திவிடும் ஒன்றாகவும் தியாகராஜ உற்சவம் விளங்குகிறது என்பதைச் சொல்லலாம்.

கர்நாடக இசையின் மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஷியாமா சாஸ்திரி ஆகியோருள் ‘நாத பிரம்மம்’ என்று கொண்டாடப்படும் தியாகராஜ சுவாமிகளின் நினைவாக இந்த தியாகராஜ உற்சவம் அமைகிறது. திருவையாற்றில், காவேரிக் கரையில் அமைந்த அவரின் சமாதி அருகே, அவர் சமாதியடைந்த மார்கழி மாத பூர்வ பக்க பஞ்சமி தினத்தில், இப்போது 115 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து இவ்வுற்சவம் நடைபெற்றுவருகிறது. இசைக்கலைஞர்கள், அந்த நாதபிரம்மத்துக்கு தங்களின் மனதார்ந்த அஞ்சலியாக நினைந்து இதில் கலந்துகொள்கிறார்கள். ஐந்து தினங்கள் நிகழும் இந் நிகழ்வில், ஐந்தாம் நாளான பஞ்சமி தினத்தில், இவர்கள் எல்லோரும் இணைந்து, தியாகராஜரின் பஞ்சரத்தின கீர்த்தனைகளை இசைப்பது, இந்த ஐந்து நாள் நிகழ்வின் முத்தாய்ப்பாக அமையும்.

1847இல் தியாகராஜ சுவாமிகள் சமாதியடைந்தபோது, காவேரிக் கரையில் அமைக்கப்பட்டு, பின்னர் சிதைவுற்றுப்போன அவரின் சமாதியை 1903இல், வயதான அவருடைய சிஷ்யர்களான உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தர பாகவதர் என்போர் அங்குசென்று கண்டுபிடித்து, அச் சமாதியைப் புதுப்பித்து, அடுத்த ஆண்டு முதல் அவர் சமாதியடைந்த தினத்தில், அங்கு இந்த ஆராதனையை நிகழ்த்த தீர்மானித்து, தொடங்கினார்கள். 1905ஆம் ஆண்டு மிகப் பெரிய அளவில், பெருவாரியான கலைஞர்கள் கலந்துகொண்டும், ஏழைகளுக்கு உணவளித்தும் இந்த ஆராதனை பெரும் சிறப்புற்றது. தில்லைஸ்தானம் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்ட நரசிம்ம பாகவதரும் பஞ்சு பாகவதரும் இதன் பின்னணியில், இந்த நிகழ்வின் ஏற்பாட்டிலும், நிதித் தேவையிலும் பெரும் துணைநின்றார்கள்.

‘யார் நீ ; நீயா, நானா?’ பிரச்னை அடுத்த ஆண்டிலேயே ஆரம்பித்தது. சகோதரர்கள் பிரிந்தார்கள்.

1906இல், ஒரேவேளையில் இரண்டு ஆராதனைகள். கலைஞர்கள் கட்சி சேர்ந்தார்கள். தில்லைஸ்தானம் சகோதரர்களில் மூத்தவரான நரசிம்ம பாகவதரின் கட்சி, ‘பெரிய கட்சி’. இளையவரான பஞ்சு பாகவதரின் கட்சி ‘சின்னக் கட்சி’!

சகோதரர்கள் இறந்துவிட்ட பின்னரும் கட்சிகள் பிழைத்தன. பெரிய கட்சிக்கு வயலின் வித்வான் மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளையும், சின்ன கட்சிக்கு கதாகாலாட்சேப விற்பன்னரான சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரும் தலைமை யேற்றார்கள்.

காலப்போக்கில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இரு கட்சிகளும் ஒரே நேரத்தில் அல்லாது, சின்னக் கட்சி பஞ்சமி தினமும் அதற்கு முந்திய நான்கு தினமுமாக ஐந்து தினங்களும், பெரிய கட்சி பஞ்சமி தினமும் அதற்குப் பின்னரான நான்கு தினங்களாக ஐந்து தினங்களும் கொண்டாடுவதாக உடன்பாடானது.

ஆக, மோதல் லாபமாயிற்று. ஐந்து நாள் கொண்டாட்டம் ஒன்பது நாள்களாகியது. இசை இன்பம்; உணவின்பம்.

ஆனால், கட்சிகள் இரண்டுபட்டாலும் ஒரு விடயத்தில் அவை ஒன்றுபட்டன. பெண்கள் எவரும் இந்த ஆராதனைகளில் பங்குபற்ற இயலாது. அதாவது, பங்குபற்றி அங்கு பாட இயலாது. இது மாத்திரமல்ல, நாதஸ்வரமும் இடம்பெறக்கூடாது.

இப்போது தோன்றியது மூன்றாவது கட்சி.

சென்னையில் அப்போது பிரபல்யம்பெற்ற இசை, நடன கலைஞரான பெங்களூர் நாகரத்தினம்மா, தியாகராஜர் கீர்த்தனைகளை வாழ்நாள் முழுவதும் தன் மூச்சாகக்கொண்டவர். மைசூர் சமஸ்தானத்தில் ஆஸ்தான கலைஞராக திகழ்ந்த இவரே, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சென்னையில் வரிப்பணம் செலுத்திய முதலாவது தேவதாசி. இவர் 1925இல், தியாகராஜரின் சமாதியருகே அவருக்கு ஒரு சந்நிதானத்தை நிர்மாணித்தார்.



சந்நிதானத்தின் நிர்மாணத்துக்கு எதிர்ப்பு எதனையும் தெரிவிக்காவிடினும், அதனருகே நாகரத்தினம்மா இசை நிகழ்ச்சி எதனையும் நிகழ்த்த இரு கட்சிகளுமே அநுமதிக்கவில்லை.

பல பெண் கலைஞர்களையும் இணைத்து, மூன்றாவது அணியைத் தொடங்கினார் நாகரத்தினம்மா. சந்நிதானத்தின் பின்பகுதியில் நடைபெற்ற அவரது கட்சியின் ஆராதனை பிரபல்யம்பெறத் தொடங்கி ஆதரவு பெருக, பெரிய கட்சி, சின்னக் கட்சி சரிவைக் காணத்தொடங்கின. பஞ்சமித் திதியன்று மூன்று கட்சிகளுக்கும் சமமான ஆராதனை நேரத்தை ஒதுக்கி, நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1940வரை இந்த நிலை தொடர்ந்தபோது, 1941இல் இவர்கள் எல்லோரும் இணைந்து, இப்போது திருவையாற்றில் நடக்கின்ற விதத்திலான தியாகராஜ உற்சவம் முதன்முதலாக நடைபெற்றது. எஸ். வை. கிருஷ்ணஸ்வாமி என்ற சிவில்சேவை அதிகாரி இந்த சமரசத்தை ஏற்படுத்தினார். ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் தேர்ந்தெடுத்த தியாகராஜரின் ‘பஞ்சரத்தின கீர்த்தனை’யை ஆராதனையின் இறுதியில் கலைஞர்கள் எல்லோருமே ஒன்றாக இணைந்து இசைக்கும் மரபு அப்போது ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தனது சொத்து முழுமையையும் இப்பணிக்கென்றே அர்ப்பணித்து, திருவையாற்றிலேயே வாழ்ந்த நாகரத்தினம்மாள் 1952இல் காலமானபோது, தியாகராஜ சுவாமிகளின் சமாதிக்கு அணித்தாகவே அவர் அடக்கம்செய்யப்பட்டு, தியாகராஜர் சந்நிதியை நோக்கியவிதத்தில் அவருக்கு சிலையும் அமைக்கப்பட்டது.

இப்போதெல்லாம் இந்தியாவில் மட்டுமன்றி, ஏனைய பல உலக நாடுகளிலும் தியாகராஜ உற்சவம் வெவ்வேறு மாதங்களில் நடைபெறுகிறது. ஏப்ரலில், அமெரிக்காவின் கிளிவ்லாந்தில் நடை பெறும் தியாகராஜ உற்சவம், இந்தியாவுக்கு வெளியே நடைபெறும் உற்சவங்களில் பெரிய அளவிலானது. ■

**‘யார் நீ; நீயா, நானா?’ பிரச்னை அடுத்த ஆண்டிலேயே ஆரம்பித்தது. சகோதரர்கள் பிரிந்தார்கள். 1906இல், ஒரேவேளையில் இரண்டு ஆராதனைகள். கலைஞர்கள் கட்சி சேர்ந்தார்கள். தில்லைஸ்தானம் சகோதரர்களில் மூத்தவரான நரசிம்ம பாகவதரின் கட்சி, ‘பெரிய கட்சி’. இளையவரான பஞ்சு பாகவதரின் கட்சி ‘சின்னக் கட்சி’!**

**சகோதரர்கள் இறந்துவிட்ட பின்னரும் கட்சிகள் பிழைத்தன. பெரிய கட்சிக்கு வயலின் வித்வான் மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளையும், சின்ன கட்சிக்கு கதாகாலாட்சேப விற்பன்னரான சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரும் தலைமை யேற்றார்கள்.**



## 1000 ரூபா விவகாரம்:
# இம்முறை போராட்டம் வேறுவடிவில் அமையும்

ஹற்றன், பெப்.01

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமான ஆயிரம் ரூபா, 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் இம்முறை போராட்டம் வேறுவடிவில் அமையும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் எச்சரித்துள்ளார்.



நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா நிச்சயம் பெற்றுக்கொடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர், ஆயிரம் ரூபா தொடர்பில் யோசனையை முன்மொழிந்தார்.

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும். எனவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் மட்டும் எதற்கு கம்பனிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். அரசாங்கம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். கம்பனிகளுக்கு தேயிலை சபை மற்றும் திறைசேரி மூலம் நிவாரணங்களை வழங்கலாம்.

அடிப்படை சம்பளத்தை 25 ரூபாயால் உயர்த்துவதே கம்பனிகளின் கோரிக்கை. இதனை ஒருபோதும் ஏற்கமுடியாது. ஆயிரம் ரூபா அவசியம். சம்பள நிர்ணயசபை 6 ஆம் திகதி கூடவுள்ளது. அதன்மூலம் ஆயிரம் ரூபா பெறுவதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். ஏனைய தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்கும் என நம்புகின்றோம்.

அந்தவகையில் பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் சம்பள உயர்வு கிடைக்கவேண்டும். இல்லையேல் இம்முறை போராட்டம் வேறு மாதிரியாக அமையும்- என்றார். (எ)

# கிழக்கு முனைய அமைச்சரவை பத்திரத்துக்கு எதிராக தீர்மானம்
## ஆளும் தரப்புக்குள் எதிர்ப்பு அணி

கொழும்பு, பெப்.01

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை விற்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் இன்று திங்கள்கிழமை சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கு எதிராக கடுமையான தீர்மானம் எடுக்கப்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணியின் 5 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் விமல் வீரவன்சவின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினர். பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில, லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் விஷேட வைத்திய நிபுணர் ஜீ.வீரசிங்க, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன, ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விரான் அலஸ் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (எ)

# முல்லை.குருந்தூர்மலை விவகாரம்: முக்கிய கலந்துரையாடல் இன்று

முல்லைத்தீவு, பெப்.01

முல்லைத்தீவு குருந்தூர்மலை மற்றும் படலைக்கல்லு (கல்யாணிபுர) ஆகிய பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கான பூர்வாங்கச் செயல்பாடுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு தமிழ் மக்களின் பூர்வீக அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளன என சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் விகாரை அமைக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் அபாயமுள்ளது என சந்தேகங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின் போது யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துறைசார்ந்தவர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு தமிழ் அரசியல், சிவில் பிரதிநிதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் தொல்லியல் துறை அதிகாரிகள் கலந்து கொள்ளும் முக்கிய கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தரப்பு துறைசார்ந்தவர்களை குருந்தூர்மலை அகழ்வாராய்ச்சிகளின் போது ஈடுபடுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. (எ)

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் உடன் திருத்தம் செய்ய முடியாது
## ஐ.நா., ஐரோ. ஒன்றியத்துக்கு இலங்கை அரசாங்கம் பதில்



கொழும்பு, பெப்.01

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட அம்சங்கள் மறுபரிசீலனை செய்யப்படும். இருப்பினும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் உடனடியாக எந்தத் திருத்தத்தையும் செய்ய முடியாது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே உடனடியாக அதில் மாற்றங்களை மேற்கொள்ள இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பரிந்துரைகளும் பரிசீலிக்கப்படும் எனவும் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியமும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் வலியுறுத்திய நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# விலகினார் திலகராஜ்

ஹற்றன், பெப்.01

தொழிலாளர் தேசிய சங்கத்திலிருந்து தான் விலக்கியுள்ளதாக தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் அறிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: “நான் பாராளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்ட காலப்பகுதியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் முக்கிய 3 பிரேரணைகளை முன்வைத்திருந்தேன்.

இதில் குறிப்பாக சம்பள விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும் என்பதை இரு பிரேரணைகள் வலியுறுத்தின. அந்தக் கோரிக்கை தற்போது வெற்றியளித்துள்ளது. இதன்காரணமாகவே கால்நூற்றாண்டு காலமாக பாராமுகம் காட்டிய அரசாங்கம் இன்று தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விடயத்தில் தலையிட்டுள்ளது.

மேலும் சம்பள விவகாரத்தில் அமைச்சரவையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் அவை நடைமுறைக்கு வருவதில் தொடர்ந்து தோல்விகளே ஏற்பட்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என நிறைவேற்று அதிகார ஜனாதிபதியே கட்டளையிட்டிருந்தார். அந்தக் கட்டளை கூட நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறு செய்வதற்கு தடையாக கூட்டு ஒப்பந்த முறைமையே இருக்கின்றது.

எனவேதான் தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என்ற யோசனையையும் பாராளுமன்றத்தில் முன்வைத்தேன். தென்பகுதி மக்களைப்போன்று மலையக மக்களையும் சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதே சகல வழிகளிலும் சாத்தியமான தீர்வாக அமையும் என நான் நம்புகின்றேன்- என்றார். (எ)

# லொறி சில்லில் சிக்குண்ட இளைஞர்கள் இருவர் பலி!

பூண்டுலோயா, பெப்.01

நுவரெலியா - பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூண்டுலோயா - கம்பளை பிரதான வீதியில் நியங்கந்தர பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் பலியாகினர்.

கொத்மலையிலிருந்து பூண்டுலோயா பகுதி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் பூண்டுலோயா பகுதியிலிருந்து கம்பளைப் பகுதிக்குச் சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த இளைஞர்கள் இருவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் இராவணாகொடை கலப்பிட்டியை சேர்ந்த சந்தருவன் ரணசிங்க (வயது - 19) மற்றும் என்.ஜீ.தினேஷ் (வயது - 19) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட முதல்கட்ட விசாரணையில்:

ஐந்து மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் குழு ஒன்று சுற்றித் திரிந்ததாகவும், இவ்வாறு சுற்றித் திரிந்த குழுவில் ஒரு மோட்டார் சைக்கிளே விபத்துக்குள்ளாகியதாகவும், மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞனின் கவனவீனமே விபத்து ஏற்படக்காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பில் லொறி சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)



# இலங்கையின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த ஜெனிவாவில் புதிய பிரேரணையே தேவை

## அரசுக்கு மஹாநாமஹேவா ஆலோசனை



கொழும்பு,பெப்.01

**இலங்கை அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை களைவதற்கு, போர் ஓய்ந்ததற்குப் பின்னரான காலப் பகுதியில் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கச் செயல்பாடுகள் முதல், ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நீதிபதி தலைமையில் நியமிக்கப் பட்டுள்ள குழு வரையிலான உள்ளக செயல்பாடுகளைக் குறிப்பிட்டுக்கூறும் புதிய பிரேரணையே தற்போதைய சூழலில் அவசியமாக உள்ளது என சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி கலாநிதி. பிரதீபா மஹா நாமஹேவா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை தொடர்பான மீளாய்வு அறிக்கையை சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டிருக்கின்றார். இதனை எதிர்வரும் 24ஆம் திகதி ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்நிலையில் அவர் இம்முறை வெளியிட்டுள்ள அறிக்கையில் முதலில் சிவில் நிர்வாகத்தில் 28 படை அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்பட்டமை தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 20ஆவது திருத்தச் சட்டத்தால் ஏற்பட்டுள்ள அதிகாரக் குவிப்பு மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமல் போனமை, அரசமைப்பில் உள்ள உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளமை, இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30-1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படாமை, விசேடமாக கலப்பு பொறிமுறையுடான நீதி விசாரணை முன்னெடுக்கப்படாமை ஆகியவற்றையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றில் இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த அறிக்கை கடந்த காலங்களில் வெளியான அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் வித்தியாசமானது. இதனை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். இல்லாவிட்டால் கொரோனா நெருக்கடியை விட மிகவும் ஆபத்தான நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைகள் உருவாகிவிடும். இலங்கையில் நல்லிணக்கத்தை மீளக் கட்டியெழுப்புதலில் காணப்பட்ட குறைகளை அடிப்படையாக வைத்தே இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே வடக்கு - கிழக்கு மக்களுடான மீள் இணக்க விடயங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் தமிழ் அரசியல் வாதிகளை மையப்படுத்தாது அரசாங்கம் நேரடியாக தமிழ் மக்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவுத்தூபி உடைக்கப்பட்டமையும் பின்னர் அதனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் அரசாங்கத்தின் மாறுபட்ட நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளது. அதுபோன்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை உட்பட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்வதற்காக நீதிபதி தலைமையிலான மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துதல். இத்தகைய விடயங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். ஜெனிவா வதிவிடப் பிரதிநிதி மூலம் உரிய பிரசாரங்களை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

அதேநேரம், இலங்கை சார்பில் இம்முறை பிரித்தானியா, கனடா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளே பிரேரணையை கொண்டுவரவுள்ளன. அந்த நாடுகளிடத்தில் மேற்படி விடயங்களை வெளிப்படையாக கலந்துரையாடுவதன் மூலம் இணக்கப்பாடு ஏற்படுத்த முடியும்.

அவ்விதமான முயற்சிகளுக்கு அப்பால் உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் மேற்படி விடயங்களை மையப்படுத்தி இலங்கை தனது நிலைப் பாட்டைதெளிவுபடுத்தும் பிரேரணையொன்றை கொண்டு வர முடியும். சீனா, பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகள் இணை அனுசரணை நாடுகள் அல்லாத மேற்குலக நாடுகள் ஆகியவற்றின் ஆதரவைக் கோர முடியும். விசேடமாக காஷ்மீர் பிரச்னையில் நெருக்கடியில் இருக்கும் இந்தியாவின் ஆதரவையும் இலங்கை கோரமுடியும். இந்தியாவின் ஆதரவைப் பெற்றால் கணிசமான மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன- என்றார். (எ)

# அடையாள அட்டைகளில் வங்கிப் பண மோசடி:

## சந்தேகநபர் சிக்கினார்

கொழும்பு,பெப்.01

அடையாள அட்டைகளை திருடி, அவற்றைப் பயன்படுத்தி பல வங்கிகளில் கணக்குகளை ஆரம்பித்து, பண மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: நவீன சங்கீத பொருள்கள் மற்றும் நவீன முறையிலான கணனி இயந்திரங்கள் என்பன குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என்று இணையத்தளத்தில் விளம்பரம் செய்து, பண மோசடியில் ஈடுபட்ட நபர் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெலிகமை பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை நாத்தான்டியா பகுதியைச் சேர்ந்த 29 வயது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரால் இணையத்தில் பதிவேற்றப்பட்ட விளம்பரம் தொடர்பில், எவரேனும் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு அவசியமான பொருளை அனுப்பி வைப்பதற்கு முற்பணம் செலுத்துமாறு தெரிவித்துள்ளதுடன் அதற்காக தமது வங்கிக் கணக்குக்கு பணத்தை வைப்பிலிடுமாறும் பின்னர் பொருளை அனுப்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெருந்தொகையான பணத்தை கொள்ளையிட்டுள்ளதுடன் இந்த மோசடிகளுக்காக பயன்படுத்திய வங்கிக் கணக்குகளும் பிற நபர்களின் அடையாள அட்டைகளைப் பயன்படுத்தியே ஆரம்பிக்கப் பட்டுள்ளன என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதற்கமைய இந்த சந்தேக நபரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்த போது அவரிடமிருந்து 6 அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இந்த நபரால் ஏமாற்றப்பட்டவர்கள் அதுதொடர்பில் 071-8591753 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு குற்றப்புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்ய முடியும். இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)



# வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அரச சொத்து விற்கப்படாது

கண்டி,பெப்.01

ராஜபக்ஷ அரசாங்கம் எந்தவொரு அரச சொத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்காது என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் அனைத்து விடயங்களும் கருத்தில்கொள்ளப்படும்.

ஜனாதிபதியின் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டதற்கு அமைவாகவே அரசாங்கம் செயல்படும். இந்த விடயத்தில் ஜனாதிபதி பொருத்தமான முடிவை எடுத்துள்ளார்.

கிழக்கு முனையத்தின் செயல்பாடுகள் தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இறுதி முடிவை எடுப்பதற்கு முன்னர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை கூடி ஆராயும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# இரத்மலானை அஞ்சுவின் சகா போதைப்பொருளுடன் கைது

கொழும்பு,பெப்.01

பாதாள குழு உறுப்பினரான சிங்ஹாரகே அமல் சமிந்த தி சில்வா எனப்படும் ‘இரத்மலானை அஞ்சு” என்ற சந்தேக நபரின் சகா ஒருவர் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை - லுனாவ பகுதியில் நேற்றுக்காலை பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

லுனாவ பகுதியைச் சேர்ந்த 28 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 7 கிலோ 57 கிராம் கஞ்சா மற்றும் 5 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)



# வீசப்படும் முகக்கவசங்களில் சிக்கி அந்தரிக்கும் பறவைகள்!

## நாடாக்களை அகற்றி வீசக் கோரிக்கை

பாரிஸ், பெப். 01

பயன்படுத்திய மாஸ்க் வகைகளை அவற்றின் நாடாக்களை வெட்டி விட்டு அல்லது அகற்றிவிட்டு வீசுமாறு பொதுவான வேண்டுகோள் மீண்டும் விடுக்கப்பட்டிருக்கிறது.

பல நாடுகளில் கால்களில் மாஸ்க் சிக்கி அந்தரிக்கும் பறவைகள் பல தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

உலகின் பல பகுதிகளிலும் பறவைகள், சிறிய விலங்குகள் போன்றன கால்களில் மாஸ்க் சிக்கிக்கொள்வதால் நடப்பதற் கும் பறப்பதற்கும் நீந்துவதற்கும் சிரமப்படுகின்ற காட்சிகள் பல சமூக ஊடகங்களிலும் பரவி வருகின்றன.

தொற்று நோய் நெருக்கடியால் மனிதனின் நாளாந்த அத்தியாவசிய பாவனைப் பொருள்களில் ஒன்றாக மாஸ்க் மாறி உள்ளது. ஒருதடவை பயன்படுத்துகின்ற மாஸ்க் வகைகள் பாவித்த பிறகு கண்ட இடங்களிலும் வீசப்படுவதால் சூழல் மாசடைவதோடு பறவைகள், விலங்குகளும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

மாஸ்க்கை காதில் மாட்டிக் கொள்ளப் பயன்படுகின்ற நூல் போன்ற பகுதி மிக இலகுவாகப் பறவைகளது கால்களில், கழுத்தில் சிக்கிக் கொள்வது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அவற்றை உரிய கழிவு சேகரிக்கும் இடங்களில் போடவேண்டும். அல்லது அவற்றின் நாடாக்களை வெட்டி விட்டோ அகற்றி விட்டோ வீச வேண்டும் என்று இங்கிலாந்தின் வன உயிரின உரிமை பேணும் அமைப்பு ஒன்று மீண்டும் கேட்டிருக்கிறது.



(படம் :காலில் மாஸ்க் சுற்றிக் கொண்டதால் பறக்க முடியாமற் தவித்த ஒரு கடற்பறவை. கடந்த செப்ரெம்பரில் இங்கிலாந்து சவுத் எசெக்ஸ் வைல்ட்லைவ் வைத்தியசாலை வெளியிட்ட படம்.)



# புடினுக்கு சொந்தமான மாளிகைக்கு உரிமை கொண்டாடும் செல்வந்தர் !

மொஸ்கோ, பெப். 01

கருங்கடல் கரையோரத்தில் அமைந்துள்ள 1.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள அரண்மனை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்குச் சொந்தமில்லை என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ரஷ்ய பெரும் செல்வந்தரான அர்காடி ராட்டன்பெர்க் குறித்த அரண்மனையை தன்னுடையது என்று கூறியுள்ளார்.

கிரெம்ளின் விமர்சகர் அலெக்ஸி நேவல்னி எழுதிய அரண்மனை பற்றிய வீடியோ அறிக்கையில், இந்த அரண்மனை புடினுக்குச் சொந்தமானது என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ரஷ்ய பெரும் செல்வந்தரும் ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு மிக நெருக்கமான அர்காடி ராட்டன்பெர்க், இந்த அரண்மனையை தன்னுடையது என கூறியுள்ளார்.

ரஷ்யா முழுவதும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை தீவிரமடைந்து வரும் நிலையில் அவரது இந்த கருத்து வெளியாகியுள்ளது.

# பிரான்ஸில் இளவயதினரிடையே தற்கொலை முயற்சிகள் அதிகரிப்பு

பாரிஸ், பெப். 01

சிறுவர்கள், இளவயதினர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்ற சம்பவங்கள் எச்சரிக்கும் அளவில் அதிகரித்துள்ளன என்று பாரிஸின் பிரபல 'நெக்கர்' சிறுவர் மருத்துவ மனையின் நிபுணர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பாரிஸ் மருத்துவமனைகள் சிலவற்றில் கடந்த சில நாட்களாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்ட இளவயதினர் நாளாந்தம் ஒருவர் என்ற கணக்கில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொற்று நோய் தொடங்கியதில் இருந்து நாளாந்த வாழ்வு முடக்கங்களால் பெரிதும் மனப் பாதிப்புகளுக்கு உட்பட்டுத் தனித்துப் போயிருக்கின்ற இளவயதினர், தற்கொலை முயற்சி களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் எண்ணிக்கை இரண்டு மடங்காகி உள்ளது என்று நேக்கர் மருத்துவமனை யின் சிறுவர் மனநலப் பிரிவின் பணிப்பாளர் பொலின் சாஸ்ற் தொலைக்காட்சி நேர் காணல் ஒன்றில் எச்சரித்துள்ளார்.

"15 வயதுக்குக் குறைந்தவர்கள் தங்களுடைய சொந்தப் பாதிப்புகளுடன் மனநலப் பிரிவுக்கு வருகிறார்கள். பாதிப்பின் வெளிப்பாடுகள் அவர்களில் தீவிரமாகத் தெரிகின்றன. பொதுவாக தற்கொலை எண்ணம் கொண்ட சிறுவர்களை நாங்கள் சந்திக்க வேண்டி வருவதில்லை. இப்போது அது அதிகரித்துள்ளது. மனநலப் பிரிவில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது."

" நாடு முழுவதும் தேசிய அளவில் இது ஒரு பிரச்சினையாக இன்னமும் மாறவில்லை. ஆனால் பாரிஸ் பிராந்தியத்தில் எச்சரிக்கும் அளவை எட்டி உள்ளது" -இவ்வாறு அந்த மருத்துவ நிபுணர் குறிப்பிட்டார்.

# அவசர தேவைகளின் நிமித்தம் வெளிநாடு செல்வதற்கு அனுமதிப் படிவம் வெளியீடு

## பிரான்ஸ் அரசு போக்குவரத்துக் கட்டுப்பாடு

பாரிஸ், பெப். 01

நேற்று நள்ளிரவுக்குப்பின் பிரான்ஸில் இருந்து ஐரோப்பாவுக்கு வெளியே உள்ள நாடுகளுக்குச் செல்வது தடை செய்யப்படுகிறது. அவசர காரணங்களுக்காக மட்டுமே ஒருவர் வெளிநாடு ஒன்றுக்குப் பயணிக்க முடியும்.

பிரான்ஸின் பிரதமர் வெள்ளியன்று அறிவித்த போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் படி இந்தத் தடை அமுலுக்கு வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகள், மற்றும் சுவிற்சர்லாந்து, அந்தோரா, நோர்வே, ஐஸ்லாந்து, மொனகோ, வத்திக்கான் தவிர்ந்த ஏனைய வெளிநாடுகளுக்குச் செல்வதற்கே புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் அல்லது மருத்துவ காரணம், குடும்பம், தொழில் ஆகிய மூன்று தேவைகளுக்காக மட்டுமே ஒருவர் வெளிநாடு செல்லலாம். நாடொன்றுக்குப் பயணம் செய்ய வேண்டிய அவசியம் இருப்போர், அதற்கான ஆதாரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஓர் அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வெளிநாடு செல்வோருக்கான அனுமதிப் படிவத்தையும் அதற்கு ஆதாரங்களாகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை என்ற விவரங்களையும் உள்துறை அமைச்சு அதன் இணையப்பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது.

விமான நிலையப் பரிசோதனைகளின் போது பயணத்துக்கான ஆதாரங்கள் சோதனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குப் பயணம் செய்வதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் கிடையாது. ஆனாலும் வைரஸ் தொற்று நிலைமை சீராகும் வரை பயணங்களைத் தவிர்க்குமாறு வெளிநாட்டு அமைச்சு அறிவுறுத்தி உள்ளது.

# கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவால் தடுப்பூசி!

## தடையை மீறி விநியோகம்




மொஸ்கோ, பெப். 01

உக்ரைனின் தடையை மீறி கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பகுதிக்கு ரஷ்யா தனது ஸ்பூட்னிக்-வி கொவிட்-19 தடுப்பூசியை வழங்கத் தொடங்கியுள்ளதாக உள்ளூர் செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது.

நேற்று முதல் மேற்கத்தேய நாடுகளில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை வாங்குவதற்கு உக்ரைன் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன் ரஷ்யாவின் ஸ்பூட்னிக்-வி தடுப்பூசியை பயன்படுத்தவும் தடைவிதித்துள்ளது.

ஆனால், ரஷ்யாவுடனான அதன் எல்லையில் டொனெட்ஸ்க் பகுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன், அங்கு உக்ரேனியத் துருப்புக்களுக்கும் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் கடந்த 2014 முதல் மோதல் இடம்பெற்று வருகிறது. இந்த மோதலில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சுயாட்சியாக பிரகடனப்படுத்தப்பட்ட டொனெட்ஸ்க் குடியரசிற்கு ரஷ்யா இரண்டாயிரம் தடுப்பூசிகளை முதற்கட்டமாக வழங்கியுள்ளது.

இந்நிலையில், ஒவ்வொரு துறையிலும் ரஷ்யா தங்களுக்கு ஆதரவளிப்பதற்கு தாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என டொனெட்ஸ்க் குடியரசின் தலைவரான டெனிஸ் புஷிலின் தெரிவித்துள்ளார்.

# நான்காவது முறையாக இறுதிப் போட்டிக்குள் சிட்னி சிக்ஸர்ஸ் அணி!

பிக் பேஷ் ரி-20 லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிப் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்று நான்காவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது.

கன்பெரா மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிப் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும் பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 167 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜோஸ் ங்கிலிஷ் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களையும் டெர்னர் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் பந்துவீச்சில், த்வர்ஷுயிஸ் 2 விக்கெட்டுகளையும் பேர்ட், அபோட், ஸ்டீவ் ஓகீப், பிரத்வெயிட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 168 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, 17 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் சிட்னி சிக்ஸர்ஸ் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்று நான்காவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.



இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜேம்ஸ் வின்ஸ் ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களையும் ஜோஸ் பிலிப்பே 45 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியின் பந்துவீச்சில், லியாம் லிவிங்ஸ்டோன் 1 விக்கெட்டை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 53 பந்துகளில் 1 சிக்ஸர் 14 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜேம்ஸ் வின்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ள சிட்னி சிக்ஸர்ஸ் அணி, பெப்ரவரி 6ஆம் திகதி நடைபெறவுள்ள மகுடத்திற்கான இறுதிப் போட்டியில் களமிறங்கவுள்ளது.

சிட்னி சிக்ஸர்ஸ் அணி முன்னதாக 2011-12ஆம் மற்றும் 2019-20ஆம் பருவ காலங்களில் என இரண்டு முறை சம்பியன் பட்டங்களை வென்றுள்ளது. அதேபோல 2014-15ஆம் மற்றும் 2016-17ஆம் பருவ காலங்களில் என இரண்டு முறை இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.



# விதி மீறிய ரொனால்டோ

உலகின் புகழ் பூத்த உதைபந்து வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ, கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறையை மீறியதாக இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பீட்மாண்ட் மற்றும் வாலே டி ஆஸ்டா பகுதிகளுக்கு இடையில் பயணம் செய்வதன் மூலம் கொவிட் 19 விதிகளை மீறியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவர் தனது காதலி ரோட்ரிக் பிறந்த நாளுக்காக துரின் நகரிலிருந்து 150 கி.மீற்றர் பயணம் செய்து கோர் மேயர் பகுதிக்கு அவர் சென்று உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இத்தாலியில் விதிக்கப்பட்டுள்ள கொரோனா கட்டுப்பாடுகள் பற்றி துரின் நகரில் இருந்து ஜோடியாக வெளியேறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை ரொனால்டோ மீறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ரொனால்டோ மேற்கொண்ட பயணம் குறித்து இத்தாலிய பொலிஸாரால் விசாரணை நடத்தப்படுகிறது.

# இலங்கை கிரிக்கெட்டின் அபிவிருத்திக்கு புதிய குழு

இலங்கை கிரிக்கெட்டின் அபிவிருத்தி தொடர்பில் கண்காணிக்க விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அங்கீகாரமளித்துள்ளார். இந்த குழுவிற்கான அங்கீகாரம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:-

நான் புதிய கிரிகெட் குழுவில் நியமிக்கப்படவுள்ளவர்களில் பெயர் விவரங்களை சிபாரிசு செய்துள்ளேன். இந்தக் குழுவானது வீரர்களின் முன்னேற்றம் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் குழுவில் 5 பேர் அடங்கியுள்ளதாகவும் அதில் குமார் சங்கக்கார, அரவிந்த டி சில்வா, மஹேல ஜெயவர்தன, முத்தையா முரளிதரன் மற்றும் ரொஷான் மஹாநாம ஆகியோர் உள்ளடங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மஞ்செஸ்ட்டர் சிற்றி புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில்!

இங்கிலீஷ் பிரிமியர் லீக் காற்பந்து தொடரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற போட்டியில் ஆர்சனல் மற்றும் மஞ்செஸ்ட்டர் யுனைட்டெட் அணிகள் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டியில் இரு அணிகளும் எவ்வித கேல்களையும் அடிக்காதமையினால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.இதேவேளை மற்றுமொரு போட்டியில் எவர்ட்டன் அணியும் நியூகாசல் யுனைட்டெட் அணியும் மோதின.

இப்போட்டியில் நியூகாசல் யுனைட்டெட் அணி 2 : 0 என கோல்கள் கணக்கில் அடித்து எவர்ட்டன் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இதேவேளை மஞ்செஸ்ட்டர் சிற்றியும் செப்பீல்ட் யுனைட்டட் அணியும் மோதிய போட்டியில், மன்செஸ்ட்டர் சிற்றி 1-0 என்ற கோல் கணக்கில் அடித்து வெற்றியை பதிவு செய்தது.

இதன் மூலம் புள்ளிப்பட்டியலில் மென்செஸ்ட்டர் சிட்டி 44 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியதுடன் இரண்டாம் இடத்தில் 41 புள்ளிகளுடன் மன்செஸ்ட்டர் யுனைட்டெட் அணி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கிரிக்கெட் சபை தலைவராக 32 வயதுடைய ஜே ஷா நியமனம்!

ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவராக 32 வயதுடைய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளர் ஜே ஷா நியமிக்கப்பட்டுள்ளார்.

இளம் வயதுடைய ஒருவர் ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியை பொறுப்பேற்ற முதல் சந்தர்ப்பம் இது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் உசேன் இதற்கு முன்னர் ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்தார்.

இந்நிலையில் குறித்த நியமனத்திற்கு பின்னர் கருத்து தெரிவித்த அவர், இந்த மரியாதையை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டார்.

மேலும் தன்னை பரிந்துரைத்தமைக்கும் இந்த மதிப்புமிக்க பதவிக்கு



தகுதியானவர் என தன்னை கருதியதற்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையில் உள்ளவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார்.

# தேசிய சொத்துக்களை விற்க எந்த அதிகாரமும் இல்லை

## அரசு மீது சிங்கள ராவய சீற்றம்



கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு,பெப்.01

**நாட்டு மக்கள், துறைமுக தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பலரதும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்படுமானால் அது நாட்டின் இறையாண்மைக்கும் சுயாதீனத் தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு தேசிய சொத்துக்களை விற்பதற்காக இந்த அரசாங்கத்திடம் மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை என்று சிங்கள ராவய அமைப்பின் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.**

தேசிய சொத்துக்களை விற்பதற்கு அரசாங்கத்துக்கு எந்த அதிகாரமும் கிடையாது. கிழக்கு முனையம் அரசாங்கத்திடமிருந்து கைநழுவிப் போகுமானால் அது நாட்டுக்குப் பெரும் நெருக்கடியாகும். நாட்டின் பொருளாதாரம், சுயாதீனத்தன்மை என்பவற்றுக்கு ஏற்படும் அச்சுறுத்தலாகும்.

இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு பௌத்த தேரர்களும் மக்களும் இணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் ஆட்சிக்கு கொண்டுவரவில்லை. எனினும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் தற்போது தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளுக்குப் பதிலாக வர்த்தகர்கள் நாட்டை ஆட்சி செய்யும் நிலை தோன்றியுள்ளது.

அரசாங்கமும், இந்த வர்த்தகர்களும், ஜனாதிபதிக்குத் தெரியாமல் இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்கின்றார்களா? அல்லது ஜனாதிபதிக்குத் தெரிந்தே இந்த செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

அதிகாரம் கைநழுவிச் சென்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று தனிமையடைந்த பின்னர் இவை பற்றிச் சிந்திப்பது பிரயோசனமற்றது. எனவே அதிகாரம் கைகளிலிருக்கும் போதே சிந்தித்துச் செயல்படுமாறு ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம்.

நாட்டு மக்களுக்கு மாற்று வழியொன்று இல்லாததன் காரணமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதிகாரத்தை வழங்கினர். எனவே மந்தமாக செயல்படாமல் இவ்விடயத்தில் துரிதமாகச் செயல்படுமாறு கோருகின்றோம் - என்றார். (எ)

# ஆணைக்குழு பரிந்துரையை அமுல்படுத்த விஷேட குழு

கொழும்பு,பெப்.01

அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு விஷேட ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ள நிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர் தம்மிக பிரியந்த சமரகோன், கேமா குமுதினி விக்கிரமசிங்க, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியசர் ரத்னபிரிய குருசிங்க ஆகியோர் அடங்களாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (எ)




# நீதிமன்றத்தின் அதிகாரங்களை கைப்பற்றிய நிறைவேற்றதிகாரம்

## எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.01

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் மூலம் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் நிறைவேற்றுத்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளன. உண்மைகளைக் கண்டறிவதற்கு விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழுக்களால் தீர்ப்பளிக்கவோ தண்டனை வழங்கவோ முடியாது. அவை நீதிமன்றத்துக்குரிய பொறுப்புக்களாகும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவின் மூலம் உதய கம்மன்பில, பசில் ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட பலரும் அவர்களுக்கு எதிரான வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதோடு, இவர்களுக்குப் பதிலாக புதிய சந்தேகநபர்களாக ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க, சம்பிக்க ரணவக்க, எம்.ஏ.சுமந்திரன், சரத் வீரசேகர, மங்கள சமரவீர, ஷானி அபேசேகர உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளதோடு அதன் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உண்மைகளை அறிந்து கொள்வதற்காக இவ்வாறான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. ஆனால் இந்த ஆணைக்குழுக்களால் உண்மைகளை அறிந்து கொள்வதற்கான செயல்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த ஆணைக்குழுக்கள் மூலம் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் நிறைவேற்று அதிகாரத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது மிகப்பாரிய ஆபத்தாகும். இவ்வாறான அபாயநிலை ஜனநாயகத்தை சவாலுக்குட்படுத்தி 15 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. சந்தேகநபர்களை அல்லது குற்றவாளிகளை குற்றங்களிலிருந்து விடுவித்து அதற்குப் பதிலாக புதியவர்கள் சந்தேகநபர்களாகவோ அல்லது குற்றவாளிகளாகவோ பெயரிட வேண்டியது ஆணைக்குழுவின் கடமையல்ல. அவை நீதிமன்றத்தின் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும்.

இலங்கையில் நீதித்துறையில் சிக்கல் இல்லை. மாறாக நிர்வாகத்திலேயே குறைபாடுகள் உள்ளன. உண்மைகளைக் கண்டறிவதற்காக நிறைவேற்று அதிகாரத்தால் விசாரணைகளை முன்னெடுக்க முடியும். ஆனால் தீர்ப்பளிக்கவோ தண்டனை வழங்கவோ முடியாது. அவை நீதித்துறையின் பொறுப்பும் கடமையுமாகும். உண்மையில் அரசியல் பழிவாங்கல்கள் நடைபெற்றிருந்தால் அதற்கு நீதிமன்றம் மூலம் தீர்வு காண்பதே பொருத்தமானது- என்றார். (எ)

# சட்ட சீர்திருத்தங்கள் விரைவில் அறிமுகம்

## கமால் குணரத்ன தகவல்



கொழும்பு,பெப்.01

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இளைஞர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைக்கப்படுவார்கள். போதைப் பழக்கத்துக்குள்ளான வர்களை சிறைச்சாலைகளில் தடுத்து வைப்பதற்குப் பதிலாக, அவர்களை புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்புவதற்கான சட்ட சீர்திருத்தங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

நிட்டம்புவ பிரதேசத்தில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மையத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

போதைப்பொருள் பாவனையற்ற நாடாக முன்னோக்கிச் செல்வது இலகுவான பாதையாக அமையப்போவதில்லை. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்க இதுபோன்ற 8 கட்டடத்தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டவுள்ளன.

இந்தக் கட்டடத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளுக்கு முப்படைகளிலிருந்து படையினர் ஆளணியினராக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவற்றின் மூலம் ஒரே சந்தர்ப்பத்தில் 60 கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை மீண்டும் சமூகத்துடன் இணைத்துக் கொள்ள முடியும்.

2000 கைதிகளைப் பராமரிக்கத் தேவையான வசதிகளுடன் கூடிய 20 கட்டடங்களை வீரவில பகுதியில் நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் போதைப்பொருள் அச்சுறுத்தல் முற்றாக இல்லாதொழிக்கப்படும்.

மோசமான பாதாள உலகச் செயல்பாட்டாளர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சட்டவிரோதமாக ஒரு சில அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணியதால் அதிகபட்ச பாதுகாப்பான சிறைச்சாலைகளை நாம் உருவாக்கியுள்ளோம்- என்றார். (எ)





# வவுனியாவில் பெரமுனவின் பேராளர் மாநாடு

வவுனியா,பெப்.01

பொதுஜன பெரமுனவின் பேராளர் மாநாடு வவுனியா நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயரத்தின கேரத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, வவுனியா நகரசபை உப தவிசாளர் எம்.குமாரசாமி, தெற்கு சிங்கள பிரதேச சபை உப தவிசாளர் வசந்த ராஜகருணா, விளையாட்டுத் துறை அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் பாலித மற்றும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (எ)

# பொடி லெசியின் உதவியாளர் ரி-56 ரக துப்பாக்கியுடன் கைது

கொழும்பு,பெப்.01

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக்குழு உறுப்பினரான பொடி லெசியின் உதவியாளர் ஒருவர், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை - மீடியாகொடை பிரதேசத்தில் வைத்து நேற்று அதிகாலை ரி-56 ரக துப்பாக்கியுடன் இவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# வவுனியா பொலிஸ் வளாகத்தில் 16 அதிகாரிகளுக்கு கொரோனா

வவுனியா,பெப்.01

வவுனியா பொலிஸ் வளாகத்தில் அதிகாரிகள் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா தலைமையக பொலிஸில் பணிபுரியும் மூன்று அதிகாரிகளுக்கும் மற்றும் வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கும் இதற்கு முன்னர் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கு அமைய இந்தப் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேருக்கு கடந்த 28 ஆம் திகதி கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

பின்னர் வவுனியா பொலிஸ் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பொலிஸ் அதிகாரிகளுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. (எ)

# 24 மணித்தியாலங்களுக்குள் 848 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு,பெப்.01

நேற்று 31ஆம் திகதி காலை 06 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 848 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டதையடுத்து நாட்டின் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 293 அதிகரித்துள்ளது என கொரோனா பரவல் தடுப்பு செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டவர்களில், கொழும்பைச் சேர்ந்த 157 பேரும், கம்பஹாவைச் சேர்ந்த 136 பேரும் குருநாகலையைச் சேர்ந்த 108 பேரும், களுத்துறை மற்றும் கண்டியில் தலா 82 பேரும் அடங்குகின்றனர் என வைரஸ் பரவல் தடுப்பு செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் 882 பேர் குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 57 ஆயிரத்து 159 ஆக உயர்வடைந்துள்ளது. மேலும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட 6,742 பேர் வைத்திய சாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 8 பேர் உயிரிழந்ததையடுத்து வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 313 ஆக உயர்வடைந்துள்ளது. (எ)

# கிழக்கு முனைய விவகாரத்தில் எதிர்ப்புக்கள் அரசின் நாடகமே

## ஆளுந்தரப்பை சாடுகிறார் ஹிருணிகா



கொழும்பு,பெப்.01

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதைப் போன்று ஆளுந்தரப்பின் இரண்டாவது நாடகம் தற்போது அரங்கேறியுள்ளது. துறைமுக தொழிற்சங்கங்களின் போராட்டங்களை முடக்குவதற்காகவே இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. எனவே மக்கள் இதற்கு ஏமாந்துவிடக்கூடாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.**

தேசிய சொத்துக்களை வரலாற்றில் எந்த அரசாங்கத்திலும் இல்லாதளவுக்கு இந்தியா, சீனா என அனைத்து நாடுகளுக்கும் பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு எதிராக மக்கள் ஆரம்பத்திலேயே குரல் கொடுக்கவில்லை என்றால் எதிர்வரும் காலங்களில் துறைமுகசேவைக்கு சீன அமைச்சர் நியமிக்கப்படக் கூடிய நிலைமை கூட தோற்றம்பெறும் என சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் ஆளுந்தரப்பிலுள்ள சில அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆரம்பத்தில் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டவர்கள் தான் இறுதியில் அதற்கு வாக்களித்தார்கள். எனவே நாட்டின் தேசிய சொத்துக்கள் தொடர்பில் பற்றும் பொறுப்பும் இருந்தால் தொழிற்சங்கங்களை மாத்திரம் நம்புமாறு கோருகின்றோம். காரணம் தற்போது அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்கள் கட்சி பேதமின்றி இணைந்துள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்கப் போராட்டங்களை முடக்குவதற்காகவே எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறிக்கொண்டு நாடகமாடுகின்றனர். இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் கூட ஜனாதிபதி அழைத்து எவ்வித கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை. காரணம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பறிபோகக்கூடும். அவ்வாறு ஏதேனும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் தற்போது குரலை உயர்த்தியுள்ள அமைச்சர்களும் மௌனமாகி விடுவார்கள்.

உண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒப்பிடும் போது மஹிந்த ராஜபக்ஷ சிறந்தவராவார். அதனால் தான் அவர்களுக்கிடையிலும் தற்போது முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் சுதந்திர தினத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மகிழ்ச்சியாக சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான எந்தவித சூழலும் இலங்கையில் இல்லை- என்றார். (எ)

# 31 ஆயிரம் தொற்று தடுப்பூசிகள் இராணுவத்தினருக்கு ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 01

கொவிட் - 19 பரவலை கட்டுப்படுத்தலில் முன்வரிசையில் செயல்படும் இராணுவத்தினருக்கு ஏற்றுவதற்காக 31 ஆயிரம் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிடைத்திருக்கும் அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசிகளில் இராணுவத்தினருக்கு செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட 31 ஆயிரம் தடுப்பூசிகளில் ஒரு தொகுதி இராணுவ வைத்தியசாலைகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பப்பட்டது.

பலாலி, அநுராதபுர, மன்னார், வவுனியா, மின்னேரியா, கொழும்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, தியத்தலாவை இராணுவ வைத்தியசாலைகள் மற்றும் அம்பாறை இராணுவ கம்பெட் பயிற்விப்புக் கல்லூரி, பனாகொடை 1 வது இலங்கை இராணுவ வைத்திய படையணி, 11 ஆவது படைப்பிரிவின் சிகிச்சை நிலையம், 22 வது படைப்பிரிவின் சிகிச்சை நிலையம், 61 வது படைப்பிரிவின் சிகிச்சை நிலையம் ஆகிய இடங்களை தடுப்பூசிகள் சென்றடைந்தன.

இராணுவ வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் 500 தடுப்பூசிகள் என்ற அளவில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், 7,500 தடுப்பூசிகளை வழங்கி நிறைவு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இராணுவத்தினருக்காக குறித்து ஒதுக்கப்பட்ட 31,000 தடுப்பூசிகளை நேற்று முன்தினம் தொடக்கம் அடுத்த 3 நாட்களுக்குள் வழங்கி நிறைவு செய்ய இராணுவ வைத்தியக் குழு எதிர்பார்த்துள்ளது.

கொழும்பு - நாரஹேன்பிட்டி, பனாகொடை இராணுவ மருத்துவமனைகளின் மருத்துவ குழுவினரால் கொவிட் - 19 தடுப்பு செயற்பாட்டிலுள்ள ஆயிரம் இராணுவத்தினருக்கு நேற்று முன்தினம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

# முகக்கவசம் அணியத்தவறிய மேலும் 52 பேர் கைதாகினர்



கொழும்பு,பெப்.01

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலயத்துக்குள் 52 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2,905 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# கங்கையில் நீராடிய மாணவி மரணம்

கொழும்பு,பெப்.01

பலாங்கொடை, கல்தொட படகொட பிரதேசத்தில் வளவை கங்கையில் நீராடிக் கொண்டிருந்த மாணவி நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

பலாங்கொடை, தென்ன பிரதேசத்தை சேர்ந்த நிரோஷிகா குமாரி என்ற 16 வயது பாடசாலை மாணவியே இவ்வாறு மரணித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கல்தொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

# கம்பஹாவில் கோர விபத்து: மூன்று பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, பெப். 01

கம்பஹாவின் ஜா-எல பிரதேசத்தில் விமானப்படை முகாமிற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

நேற்று காலை 6.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

ஜா-எலவில் இருந்து மினுவங்கொடை நோக்கி பயணித்த மோட்டார் வாகனமொன்று வீதியை விட்டு விலகிச் சென்று பாதுகாப்பு சுவரில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சாரதி மற்றும் மேலும் இருவர் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டன பின்னர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் 49, 47 மற்றும் 69 வயதுடைய மூவரே உயிரிழந்தனர். விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை ஜா-எல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ஐ)

# 57 ஆயிரம் பேர் பூரணசுகம்

கொழும்பு,பெப்.01

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் நேற்று மேலும் 882 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 57 ஆயிரத்து 159 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை கொரோனா தொற்றுள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 313 ஆக அதிகரித்துள்ளது. (எ)

ஈழநாடு
Eelanadu

# கிழக்கு கொழும்பு துறைமுகத்தை எவருக்கும் வழங்கப்போவதில்லை



## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, பெப். 01

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை எவ்விதத்திலும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப் போவதில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கிழக்கு முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்கவுள்ளமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து ஊடகவியலாளர்கள் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் குற்றச்சாட்டுவதற்குரிய தேவை யாருக்கும் கிடையாது எனவும் கிழக்கு முனையம் தமது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே காணப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தமது தீர்மானம் குறித்து துறைமுக தொழிற்சங்கங்களுக்கு அறிவிக்கவுள்ளார் என்றும், ஆகவே, இதற்கான பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சரவையிலுள்ள 95 வீதமானவர்கள், கிழக்கு முனையத்தை வெளிநாட்டவர்களுக்கு வழங்கக்கூடாது என்ற நிலைபாட்டிலேயே உள்ளனர் எனவும் இதன்போது பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய வளங்களை விற்பனை செய்வது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை எனவும் அந்த கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு தமது அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்யவில்லை எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஐ)

# மனித உரிமைகள் மீறல் விசாரணை ஆணைக்குழுவை வரவேற்கிறது ஈ.பி.டி.பி. கட்சி



வவுனியா, பெப். 01

மனித உரிமைகள் மீறல் தொடர்பில் அரசாங்கம் அமைத்துள்ள புதிய ஆணைக்குழுவை வரவேற்பதாக கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தின் சமுதாய வேலைத்திட்டத்தின் கீழ் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் வீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மீறல் தொடர்பில் ஆராய்வதற்காக புதிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டமை நன்மையான விடயமே. ஆட்சி மாறியுள்ளமையால் நடந்த உண்மைகளை அறிவதற்காக அவ்வாறான குழுக்களை அமைத்து தகவல்களை பெற்றுக்கொள்ளவதுண்டு. அந்தவகையில் அது வரவேற்ககூடிய விடயமே.

அத்துடன் இந்தியாவுடனும் நாங்கள் நட்புறவை பேணவேண்டும். அந்தவகையில் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்க வழங்குவதற்கு உத்தேசித்துள்ளமையும் நல்ல விடயமே. சட்டரீதியான பிரச்னைகள் இருப்பதால் 51 வீதத்தை இலங்கை அரசும் வேறு முதலீட்டாளர்களிற்கு 49 வீதத்தையும் வழங்கினாலேயே அது அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்றவகையில் அது செய்யப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பூசிக்காகவே அதனை வழங்குவதாக கூறுகின்றமை எதிர்கட்சி அரசியல்வாதிகள் வழமையாக கதைக்கும் விடயமே - என்றார். (ஐ)

# தங்கையை காட்டி அக்காவுக்கு திருமணம் நடத்துகிறது அரசு!

## சிங்ஹ லே அமைப்பு விசனம்

கொழும்பு, பெப். 01

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்திற்கு பதிலாக மேற்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்கும் முயற்சி தொடர்பில் மகா சங்கத்தினர் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மெடில்லே பஞ்ஞாலோக்க தேரர் இது தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

இதன்போது, தங்கையைக் காண்பித்து அக்காவை திருமணம் செய்து வைக்கும் பாணியில் அரசாங்கம் செயற்படுவதாக சிங்ஹலே அமைப்பின் செயலாளர் மெடில்லே பஞ்ஞாலோக்க தேரர் குறிப்பிட்டார்.

தேசிய சக்திகள், தொழிற்சங்கங்கள் மற்றும் தேசப்பற்றாளர்களின் ஆர்ப்பாட்டங்கள், அழுத்தங்கள் காரணமாக அரசாங்கம் பின்வாங்கி, கிழக்கு முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்காமல், மேற்கு முனையத்தை அவர்களுக்கு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தேரர் கூறினார்.

# முஸ்லிம் சட்டத்தை திருத்த தனியான குழு நியமனம்

## நீதி அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, பெப். 01

முஸ்லிம் சட்டத்தை சீர்த்திருத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

பல துறைகளிலும் சட்ட மறுசீரமைப்பு மற்றும் திருத்தத்திற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

மேலும், சிவில் சீர்திருத்தத்தில் இளைஞர்கள் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். தற்போதைய நிலையில் நாம் 11 குழுக்களை நியமித்து சட்டம் தொடர்பான திருத்தத்தை மேற்கொண்டு வருகிறோம். எனக்கு தேவையான மாதிரி அப்பம் சுடுவது போல் ஒரே நாளில் இதனை செய்ய முடியாது. முஸ்லிம் சட்டத்தை திருத்துவதற்கும் குழுவொன்றை நியமித்துள்ளோம். அது எனக்கு மறக்கவில்லை. என்றார். (ஐ)

# 50,000 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன!

கொழும்பு, பெப். 01

கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தில் நேற்று வரை சுமார் 50,000 சுகாதார ஊழியர்கள் மற்றும் முப்படையினருக்கும் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன என்று கொரோனா ஒழிப்பு, ஆரம்ப சுகாதாரம் தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியா அன்பளிப்பு செய்த 5 இலட்சம் தடுப்பூசிகளை ஏற்றும் பணிகள் நேற்று முன்தினம் தொடக்கம் முன்னெடுக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தில் நேற்றுவரை 50 ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தை வழங்க முயற்சி

## ஓமல்பே தேரர் கோரிக்கை

கொழும்பு, பெப். 01

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தைபோல மேற்கு கொள்கலன் முனையத்தையும் இந்திய நிறுவனத்திடம் கையளிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திலோ அல்லது நாட்டின் வேறு எந்தபகுதியிலோ உள்ள எந்த முனையத்தையும் வெளிநாட்டிற்கு கையளிக்க கூடாது.

எதிர்கால தலைமுறைக்காக தேசிய சொத்துக்களை பாதுகாக்கவேண்டும் என்றும் அவர் இதன்போது வேண்டுகோள் விடுத்திருந்தார். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

மணமகன் விபரம்

12748| வே|1979
Divorced |யாழ்நகரம்| இந்து
Customer Service Officer
New Zealand| 170செ.மீ
கேட்டை(விருச்சிகம்) |செவ் :08

13644|வே|1982
கொக்குவில்| இந்து |செவ் :07
Area Manager|Sri Lanka
புனர்பூசம்(மிதுனம்)|162செ.மீ

13518| வே|1982
சாவகச்சேரி|இந்து|
Store Keeper| Sri Lanka
சதயம்(கும்பம்) |170செ.மீ

13912|வே|1982
மண்கும்பான்| இந்து |செவ் :04
Technical Officer|Sri Lanka
அஸ்வினி(மேடம்)|165செ.மீ

13300| வே |1983
யாழ்நகரம்|இந்து
Singapore| Civil Engineer
திருவாதிரை (மிதுனம்) |176செ.மீ

மணமகள் விபரம்

13870|ப|1980
Widowed|யாழ்நகரம்| இந்து
Health Worker| Sri lanka
புனர்பூசம்(மிதுனம்) |158செ.மீ

13840| வே |1981
யாழ்நகரம்| இந்து |செவ் :07
Doctor|Uk| திருவோணம்(மகரம்)
168செ.மீ

13494| வே|1981
கைதடி| இந்து |
Chartered Accountant
Sri lanka|அவிட்டம்(மகரம்)
165செ.மீ

13276|வே|1982
கோப்பாய்| இந்து | Sri Lanka
Teacher|சித்திரை(துலாம்)
163செ.மீ | செவ் :04

13692| வே|1984
மானிப்பாய்| இந்து|
Teacher|Sri lanka | செவ் :01
அத்தம் (கன்னி) |165செ.மீ

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
உளவளத் துணையாளர்
7.15 மணி : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
ஆசிரிய ஆரோசகர்,
யாழ்ப்பாண கல்வி வலயம்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-நேரலை



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா

**இரவு**
7.00 மணி : சொற்சமர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலம்தானா



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,
விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள் கணிதம்

## ஸ்ரீ

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் கரம்பொன்
சீரடி சாயி இல்லம்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கொக்குவில்
சுவசுப்ரமணியர் சுவாமி கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் கரம்பொன்
சீரடி சாயி இல்லம்

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.02.2021 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.